# நீரர மங்கையர்

THE EELAKESARI
CHUNNAKAM
6-2-54

க. கணபதிப்பிள்ளை

# நீரர மங்கையர்

இலங்கைப் பல்கலைக் கழகத்துத்
தமிழ்ப் பேராசிரியர்
க. கணபதிப்பிள்ளை
எழுதியது.

கொழும்பு
சாலிவாகன சகம் ௧௮௱௭௫
விசய ஐப்பசி.

1953

எல்லா உரிமையும் ஆக்கியோனுக்கே.

விலை சதம் .90

# முகவுரை

ஒவ்வொரு நாட்டிலும் பொதுமக்களுக்குள்ளே பண்டைக்காலந் தொட்டுப் பல கதைகள் வழங்கி வருகின்றன. இவை யாவும் பெரும்பாலும் மக்கள் தம் ஓய்வு நேரங்களில் சிறுபிள்ளைகளுக்கு இன்பமூட்டுவதற்காகச் சொல்லி வருவன. அந்த அந்த நாட்டிலேயுள்ள நாட்டுப் பாடல்கள்போல இக்கதைகளும் நாட்டு மக்களின் கற்பனைக் கேணியினின்று பெருகிப்பாயும் வற்றாத ஊற்றுக்கள். எமது நாட்டுப் பஞ்சதந்திரம், இதோபதேசம், பெருங்கதை, பாரதம், இராமாயணம் முதலிய நூல்களிலுள்ள கதைகள் யாவும் இத்தகையனவே.

மேலைநாட்டிலும் இவ்வாறான கதைகள் பல ஆங்காங்கு மக்களுக்குள் வழக்கிலிருந்து வருகின்றன. அச்சியந்திரம் இல்லாத காலங்களில் இவை கேள்வி மூலமாகவே மக்களுக்குள் தலைமுறை தலைமுறையாய் வழங்கி வந்தன. அச்சியந்திரம் வந்ததற்குப்பின் அறிஞர் பலர் ஆங்காங்கு சென்று இக்கதைகளை மக்கள் வாயினின்றும் கேட்டுப் பொத்தகங்களில் எழுதிவைத்தனர். இவ்வாறு இக் கதைகளைத் தொகுத்தோரில் அந்தேசன் என்பவரும், கிறிம் சகோதரர் என்பவரும் கீர்த்தி வாய்ந்தவர்.

அந்தேசன் என்பாரின் கதைகளை நாம் படித்தபொழுது மோகினிச் சிறுமி என்னும் கதை எம் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அக்கதையை ஒட்டி எமது நாட்டுச் சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற முறையில் அதனைத் தமிழில் எழுதி வைத்தோம். சிறுபிள்ளைகளுக்குப் படிக்க இன்பமாய் இருக்கும் என்ற எண்ணத்தினால் அதற்கு நீரர மங்கையர் என்னும் மகுடஞ் சூட்டி வெளியிடுகிறோம். இயன்ற அளவு எளிய உரைநடையையே கையாண்டிருக்கின்றோம்.

இந்நூலை அச்சேற்றுங்கால் ஆயோலை தூக்கியும், பலவாறு ஊக்கமளித்தும் வந்த நண்பர்களுக்கு நன்றி. இதனைக் கூடிய விரைவில் அழகாக அச்சிட்டு உதவிய அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சியந்திரசாலையாருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

க. க.

என் நண்பர்

முதுதமிழ்ப் புலவர்

**பண்டிதர் மு. நல்லதம்பி அவர்கள்**

நினைவுக்கு.

# நீரர மங்கையர்

கடலின் ஆழமான அடியில் இருக்கும் நீர் நீலப் பூ இதழிலும் பார்க்க மிக நீலம். அன்றியும் அது பளிங்கிலும் தெளிந்தது. கப்பலின் நங்கூரமேனும் அங்கு அடைய முடியாது; அவ்வளவு ஆழம். கோயில் மணிக்கோபுரம் பலவற்றை ஒன்றன்மேலொன்று வைத் தடுக்கி அமிழ்த்தினுல் ஒருவேளை அதன் அடியைத் தொடக்கூடும். வேறெவ்விதத்தாலும் தொட முடி யாது இவ்விதமான ஆழ்ந்த அடியிற்றான் நீரரமக்கள் வாழ்கின்றனர்.

வெண்மணலன்றி அங்கு வேறொன்றும் இல்லை என்று பலர் நினைக்கின்றனர். அது பிழை; ஏனெனில், சிறிய அலையாற்கூட அசையக்கூடிய மெல்லிய மரச்சோலைகள் அங்கு உள. அவை அசையும்போது உயிருள்ளவை போலத் தோன்றும். அதனோடு அவை பார்க்க நல்ல அழகாய் இருக்கும். நிலத்தின்மேல் மரக் கிளைகளுக்கூடாகப் பெரும் பறவைகளும் சிறு குருவி களும் அங்குமிங்கும் பறந்துதிரிவதுபோல் அங்கும் பெருமீன்களும் சிறுமீன்களும் அம்மரங்களின் கிளைக ளுக்கூடாகச் சுழன்று சுழன்று வட்டமிட்டுத் திரியும்

இச்சோலைகளுக்குக் கீழேயே கடலரசன் அரண்மனை இருக்கின்றது. அது பவளத்தாற் கட்டி எழுப்பிய சுவரும், விலை மதித்தற்கரிய அம்பரினுற் செய்த சாள ரக் கதவுகளும், முத்துச்சிப்பியால் வேய்ந்த கூரையும்

உடையது. நீர் அசையும்போதெல்லாம் இச்சிப்பிகள் தங்கள் வாயை மூடுவதும் திறப்பதுமாய் இருக்கும். இது கண்ணுக்கு மிக அழகாய்த் தோன்றும். அன்றியும் ஒவ்வொரு சிப்பிக்குள்ளும் அழகிய முத்து உண்டு. அம் முத்தில் ஒன்றே ஓர் அரசனின் முடியை அழகாக்கவும் விலைமதித்தற்கரியதாகச் செய்யவும் போதுமானது.

பல ஆண்டுகளுக்கு முன்னேயே இக் கடலரசன் மனைவி இறந்து விட்டாள். அவன் வீட்டு வேலைகளை அவனுடைய தாயே மேற்பார்வை செய்து வந்தாள். வயதால் முதிர்ந்தவளானபோதிலும் கெட்டித்தனமும் கடைப்பிடியு முள்ளவள். தன் உயர்குடிப் பிறப்பைப் பற்றி அவளுக்குப் பெரிய எண்ணம். ஏனெனில் தனது குடிப்பிறப்பின் உயர்ச்சியைக் குறிப்பதற்காகப் பன்னிரண்டு முத்துச் சிப்பிகளைத் தனது வாலில் அணிகலனாக அணிந்து கொள்வாள். ஏனைய நீரரமகளிர் அவைகளிற் பத்துக்கூடத் தமது வாலில் அணிய முடியாது. இஃதொன்றைத் தவிர மற்றவைகளிலெல்லாம் அவள் மிக மெச்சத் தக்கவள். அவளுக்குச் சிறுமியர் அறுவர் பேரப்பிள்ளைகள். அவர்களில் அவள் மிகவும் அன்பு பாராட்டி வந்தாள்.

இந்த அரசகுமாரத்தியர் அறுவரும் நல்ல அழகுள்ளவர். எனினும் அவர் யாவருள்ளும் இளையவள் தான் மிக அழகி. அவளுடல் உரோசா மலரின் இதழ் போல் வனப்பும் மென்மையும் உடையது. கண் குவளைப் பூப்போல் இருண்ட நிறம். ஆனால் அவளுக்கும் அவள் சகோதரியருக்கும் கால் இல்லை. காலுக்குப்

பதிலாக மீன்வாலே உண்டு. நீருக்குள் அசையும் பூக்கள் பொலிந்து விளங்கும் சுவர்களுடைய தமது மாளிகையின் பெரிய அறையொன்றில் அவர் நாள் தோறும் ஒன்றுகூடி விளையாடுவது வழக்கம். அப்பொழுது அவருள் யாராவது ஒருத்தி தற்செயலாய் அங்குள்ள கதவுகளில் ஒன்றைத் திறந்துவிட்டாலோ உடனே மீன்கள் அங்கு உள்ளே வருவதும் வெளியே போவதுமாக ஓடி விளையாடித் திரியும். இது சிட்டுக் குருவிகள் எமது வீட்டுக்குள் வந்து பறந்து திரிவது போல இருக்கும். சிறுமீன்கள் அரசகுமாரத்தியருக் கருகில் வந்து அவரைச் சுற்றிச் சுற்றி நீந்தி விளையாடும். அவர் கையிலிருந்து சாப்பிடும். அன்றியும் தங்களை அவர் கையினுற் பிடித்து விளையாடவும் விடும்.

மாளிகையைச் சூழ்ந்து அழகிய ஒரு பெருந்தோட்டம் உண்டு. அது சிவப்பும் நீல நிறமும் இடத்துக்கிடம் கலந்து விளங்குகின்ற சோலைகளை உடையது. அதன் மரங்களில் தூங்கும் பழங்கள் பொன்போல ஒளிரும். அவற்றின் இலை நெருப்புக் கொழுந்துபோல அழகாய் இருக்கும். அங்குள்ள ஏனைய பொருட்கள் போலவே இவையும் எப்பொழுதும் அசைந்தவண்ணமாகவே இருக்கும். நிலமெங்கும் தெள்ளிய சிறுமணல். அது மங்கலான நீல நிறமுள்ளது. அவ்விடம் முழுவதும் ஒருவகையான நீலநிறம் படர்ந்திருக்கும். அங்கு நின்றுல், ஒருவனுக்குப் பூமிக்கு மேலே அதி உயரத்தில் நாலு பக்கமும் வானம் சூழ்ந்த காற்று மண்டலத்தில் நிற்பது போன்ற உணர்ச்சி உண்டாகும். கடலின் அடியில் இருப்பதாக உணரமாட்டான். காற்றின்றிக் கடல் அசைவற்று இருக்கும்வேளை சூரியனை

ஆங்கிருந்து பார்த்தால், அது சிவந்த கதிர்களைக் காலு கின்ற கிண்ணவடிவுள்ள ஒரு செம்மலர் போலத் தோன்றும்.

விரும்பியவண்ணம் செடி கொடி நடுவதற்கும் அவற்றிற்கு வேண்டிய வெவ்வேறு வேலை செய்வதற் கும் ஒவ்வொரு அரசகுமாரத்திக்கும் தோட்டத்துள் ஒவ்வொரு பாகம் உண்டு. ஒருத்தி தன் பாகத்தைத் திமிங்கில வடிவாய்ச் செய்திருந்தனள். மற்றொருத்தி ஒரு சிறிய வீரரமகள் போற் செய்திருந்தனள். அவருள் ஆக இளையவள் தனது பாகத்தைச் சூரிய வடிவம் போல் அமைத்து, அதுபோல் ஒளியுடைய சிவந்த மலர் களை வைத்து அலங்கரித்திருந்தனள். அவள் தனது சகோதரியரைப் போன்றவள் அல்லள். அவளின் செய் கையும் குணமும் அவரின் வேறுனவை. சாந்தமும் ஆழ்ந்த யோசனையும் அவளிடம் எப்போதும் குடி கொண்டிருந்தன. நடுக்கடலில் உடைந்த கப்பல்களிற் பொறுக்கிய பல புதுப் பொருட்களை அவள் சகோதரி யர் வைத்து விளையாடுவர். ஆனால் அவளுக்கோ அத் தகைய பொருட்களில் விருப்பமில்லை. சூரியன்போல் வடிவுடைய சிவந்த பூக்களும் ஒரு மானுட வாலிப னைப்போலச் சலவைக் கல்லினுற் செதுக்கி அமைத்த ஓர் அழகிய உருவமுமே அவள் மனதைக் கவர்ந்தன. இவ்வுருவம் கடலிற் கண்டெடுக்கப்பட்டது. இதைத் தனது தோட்டத்தில் நாட்டிவிட்டு, தன் நிழற்கீழ்த் தனிமையாய் நிற்போர் யாவருக்கும் அழுகை உணர்ச் சியைக் கொடுக்கும் இயல்புடைய சவுக்கமரமொன்றை யும் அதற்கருகில் நாட்டினள். அம்மரத்தின் கிளைகள்

மிக உயர்ந்து வளர்ந்து, பின்னர் வளைந்து நிலத்தை அளாவின. நில மண்டலத்திற் காற்றுண்டாக அதனுல் நீர் அசையும்போதெல்லாம் அவற்றின் மங்கலான சாயல் அங்குமிங்கும் அசைந்துகொண்டிருக்கும். அம் மரத்தைப் பார்ப்பவருக்கு அதன் கிளைகள் அடிமரத்தை அடிக்கடி கொஞ்சிக்கொண்டிருப்பது போலத் தோன்றும்.

நில உலகத்து வாழும் மனிதரைப்பற்றி அறிவதற்கு அச்சிறுமிக்கு மிகுந்த ஆசை. அங்குள்ள மரக்கலம், பட்டினம், மனிதர், விலங்கு முதலியவைகளைப் பற்றி அவள் பாட்டி, தானறிந்த அளவில் அவளுக்குச் சொல்லுவதுண்டு. பூக்களுக்கு நறுமணம் உண்டென்பதும் — கடற்குளிருக்கும் பூக்களுக்கு மணமில்லை — காடுகள் பசுமை செறிந்து விளங்குமென்பதும் அக்காடுகளிலுள்ள மரக்கிளைகளுக்கூடாக மீன்கள் செவிக்கு இனிமையும் உள்ளத்துக்கு மகிழ்ச்சியும் கொடுக்கும் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து திரியும் என்பதுமே அவளுக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தன. அவள் பாட்டி மீனென்று இங்கே குறித்தது பறவைகளை. சிறுமி விளங்கிக் கொள்வதற்காக மீனென்ருள். ஏனெனில் அச்சிறுமி இன்னும் பறவைகளைக் காணவில்லை.

"உனக்குப் பதினைந்து வயதாகிய பின்னர், நீ கடலின் மேற்புறத்துக்குப் போய், நிலா எறிக்கும் நேரங்களில் அங்குள்ள கற்பாறைகளிலிருந்து நிலா வெளிச்சத்தில் அசைந்தசைந்து ஓடிச் செல்லும் பெரிய கப்பல்களையும் காடுகளையும் அங்குள்ள பட்டினங்களையும் பார்க்கலாம்", என்று பாட்டி சொன்னுள்.

இன்னும் ஓர் ஆண்டு முடிய அவர்களில் மூத்த வள் பதினைந்து வயதினளாவாள். ஒவ்வொரு சகோதரியும் ஒவ்வோர் ஆண்டிற்கு இளையவள். அச் சிறுமியோ ஆறுவது குழந்தையாதலின் கடலின் மேற்புறத்துக்குப் போய்ப் பூவுலகத்தைப் பார்ப்பதற்கு இன்னும் ஆறு ஆண்டு கழிய வேண்டும். இவ்வண்ணமிருக்க, மூத்தவளுக்குப் பதினைந்து வயதானது. அப்போது அவள் மற்றச் சகோதரியரைப் பார்த்து, "நான் கடலின் மேற்புறத்துக்குப் போய் முதன்முதல் அங்கு எந்தப் பொருளைக் காண்பேனோ அதைப்பற்றி உங்களுக்குத் திரும்பி வந்தவுடன் விரிவாகச் சொல்லுவேன்", என்றாள். ஏனெனில் பாட்டி அவருக்குப் போதிய அளவு உலகத்துப் பொருட்களைப்பற்றிச் சொல்லவில்லை. ஆதலால் அனேக பொருட்களைப்பற்றி அறிவதற்கு ஆசைகொண்டிருந்தனர்.

மூத்தவள் கடல் மேற்புறத்துப் போனதும் அவள் எப்போது திரும்பி வருவாளென்று ஏனையோர் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் யாவரிலும் இளையவளுக்குத்தான் மிகுந்த ஆவல். ஏனெனில் மற்றவரிலும் பார்க்க அவளே ஆழ்ந்த எண்ணமும் அமைதியும் உள்ளவள். அன்றியும் ஒரு பொருளைப் பற்றிச் சொல்லி அவளை இலகுவில் திருத்தி செய்ய முடியாது.

பல முறைகளில் அவள் இராக்காலத்திலே சாளரங்களைத் திறந்து அவைகளுக்கூடாக அங்குள்ள நீல நிறம் பொருந்திய நீருக்குள்ளே வாலை அசைத்துக் களிப்போடு விளையாடித் திரியும் மீன்களை உற்று

நோக்கிக் கொண்டிருப்பாள். அல்லாமலும் அங்கிருந்த படியே வானத்தில் விளங்கிக் கொண்டிருக்கும் சந்திரனையும், வெள்ளிக்கூட்டங்களையும் பார்த்துக் களிப் படைவாள். அப்படிப்பட்ட ஆழமான அடியிலிருந்து நீருக்கூடாகப் பார்த்தால் அவை வெளுத்த நிறமாக வும் நிலவுலகத்திருப்போர் கண்ணுக்குத் தெரிவதிலும் பார்க்கப் பெரியனவாகவும் தோன்றும். சில வேளைக ளில் ஒரு முகில் அவற்றை மறைப்பதுபோல் அங்கு தோன்றினல் தானிருக்கும் இடத்துக்கு மேலே ஒரு திமிங்கிலம், அல்லது மக்கள் நிறைந்த ஒரு மரக்கலம் போகின்றது என்று அறிந்து கொள்வாள். ஆனல் அம் மரக்கலத்திற் போகும் மனிதரோவெனில் தாம் போகின்ற மரக்கலத்துக்குக் கீழ் மிக ஆழமான அடி யில், அழகிய நீரரமக்கட் சிறுமியொருத்தி தனது மெல்லிய சிறு கைகளை நீட்டிய வண்ணமாய் அம் மரக்கலத்தை உற்று நோக்கிக் கொண்டு நிற்கின்றனள் என்பதை அறியார்.

முதன்முதல் மூத்த கன்னிகை கடல் மேற்புறத் துப் போய்த் திரும்பி வந்ததும் தன் சகோதரியருக் குத் தான் கண்டுவந்த ஆயிரக் கணக்கான பொருட் களைப் பற்றி எடுத்து விரித்துக் கூறினள். எனினும் அவள் கண்ட பொருள் யாவற்றுள்ளும் அவளுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தவை என்னவெனின் தான் வெண்ணிலா வொளியில் கடற்கரையோரத்தில் அங்குள்ள அழகிய வெண்மணலிற் படுத்திருந்த வண்ணம் நிலவுலகைப் பார்த்தபொழுது கண்ட காட்சிகளேயாம். அங்குள்ள பெரிய பட்டினமொன்றில் வெள்ளிக் கூட் டம் போல மின்னிக்கொண்டிருக்கும் விளக்குகளின்

வனப்பும், அங்கிருந்து எழும் பாட்டுக்களின் இனிய ஓசையும், ஓடித்திரியும் வண்டிகளின் ஒலியும், மக்களின் ஆர்ப்பரிப்பும், கோயில்களில் உன்னதமாய் எழுந்து நிற்கும் கோபுரங்களின் சிகரங்களும், கோயில்களில் அசையும் மணிகளின் இன்னிசையுமாகிய இவையெல்லாம் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. பட்டினத்துக்குப் போக இயலாமல் இருந்தமையினாலேயே அவை யாவும் அவளுக்கு மிக விந்தையாய் இருந்தன.

இவையெல்லாவற்றையும் இளைய சகோதரி மிகுந்த ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்தனள். அன்று பொழுது பட்டதும் சாளரத்தைத் திறந்து அப்பட்டினம் இருக்கும் திசையை நோக்கியவண்ணமாய் ஆழ்ந்த சிந்தையில் அமர்ந்திருந்தனள். அப்போது அவள் மனதுக்கு அப்பட்டினத்தை நேருக்கூடாகக் காண்பது போலவும், அங்கு ஒளிரும் எண்ணரிய ஒளிகள் தன் கண்ணுக்குத் தோன்றுவது போலவும், அங்கிருக்கும் கோயிற் சிகரங்களில் இசைக்கும் மணியோசை தன் காதுக்குக் கேட்பது போலவும் இருந்தது.

அடுத்த ஆண்டு இரண்டாவது சகோதரி கடலின் மேற்புறத்துக்கும் மற்றும் தான் விரும்பிய வேறுவேறிடத்துக்கும் போவதற்கு உத்தரவு பெற்றாள். அவள் கடலுக்கு மேற்புறம் வந்து சேர்ந்தது பொழுது படும் நேரமே. பொழுது படும் காட்சியைக் கண்டாள். காண்டலும் அதனினும் சிறந்த காட்சியைத் தன் கண்கள் இதுகாறும் கண்டதில்லையென

எண்ணி யெண்ணி உவகை பூத்தாள். திரும்பிப் போய்க் கடலுக்குக் கீழிருக்கும் மாளிகையை அடைந்த போது தான் கண்டவற்றைப் பின்வருமாறு சகோதரி யருக்குக் கூறினள்: "வானம் முழுவதும் பொன் போல் ஒளிர்ந்தது. அங்கிருந்த முகிற்கூட்டம் அடைந் திருந்த அழகின் அருமையை என்னால் எடுத்துரைக்க முடியாது. ஒருவகையான செக்கர் நிறம் அடைந்த தாய் என் தலைக்குமேல் மெல்ல மெல்ல அசைந்து போய்க் கொண் டிருந்தது. இவ்வண்ணம் அசையும் முகில்களிலும் பார்க்க மிக விரைவாய் வெண்படலம் ஒன்று கடலிற் படும் சூரியனுக் கெதிரே வந்து நீரில் வீழ் வதைக் கண்டேன். அப்படலம் என்ன வென்றால் அன் னப் பறவைகளின் ஒரு பெரிய திரள். பார்க்கும்போது என் கண்ணுக்கு அது கடலில் மறைகின்ற சூரியனை நோக்கி நீந்திச் செல்வது போல் இருந்தது. ஆனால் அதற்கிடையில் அந்தச் சூரியன் கடலுக்குள் மூழ்கி விட்டது. அந்தோ! உடனே முகிலின் அழகிய செக் கர் நிறம் மறைந்து விட்டது."

பின்னும் ஓராண்டு கழிந்தபின் மூன்றாவது சகோ தரி விடை பெற்றாள். மற்றைய அரச கன்னியரிலும் அவள் மிகுந்த மனத்திடம் உடையவள். ஆனபடி யால் அவள் கடலுக்குட் பாயும் ஆறொன்றில் நீந்திச் சிறிது தூரம் சென்றாள். அப்போது அந்த ஆற்றங் கரையிலுள்ள குன்றுகள் செடிகொடியால் மூடப் பெற்று அழகாய் விளங்குவதைக் கண்டாள். அவ் விடத்திலே பறவைகள் பாடும் இன்னிசையைக் கேட் டுக் களிப்படைந்தாள். வெய்யில் கடுமையாய் எறித்த படியால் அவளுக்குச் சூடு பொறுக்க முடியவில்லை.

அதனால் அவள் பலமுறை தன் முகத்தை நீருக்குள்ளே தாழ்த்தித் தாழ்த்திக் குளிரப்பண்ணவேண்டியிருந்தது. கரையோரத்திருந்த கல்லொன்றின் அருகில் மனிதக் குழந்தைகள் கூட்டமொன்றைக் கண்டனள். அப்போது அவள் அவரோடு சேர்ந்து விளையாட விரும்பினாள். உடனே அவரை நோக்கி நீந்திச் சென்றாள். ஆனால் அவர் அவளைக் கண்டதும் பயந்து ஓடி ஒளித்து விட்டனர். அப்போது கருநிறமுடைய சிறிய மிருகமொன்று அவளுக்கெதிரே ஓடி வந்தது. அது ஒரு நாய். அதை அவள் முன்னொரு காலமும் கண்டதில்லை. அது வந்ததும், அவளைப் பார்த்தவண்ணம் நின்று கொண்டு மிகுந்த கோபத்தோடு உரத்து உரத்துக் குரைத்தது. அப்போது அதற்கு அஞ்சி அவள் சட்டென்று நடுக்கடலுக்குள் ஓடிவிட்டாள். எனினும் அங்கே அவள் கண்ட உயர்ந்த மலைகளையும் பச்சென்று விளங்கும் காடுகளையும் ஒருபோதும் மறக்க முடியவில்லை மீன்வால் இல்லாதிருந்தும் அங்குள்ள சிறுவர் சிறுமியர் நீரில் நீந்தி விளையாடுவதை எண்ணியெண்ணி மிகவும் வியப்படைந்தாள்.

நான்காவது சகோதரி அவ்வளவு மனத்திடம் உடையவளல்லள். கடலின் நடுவிலிருந்தபடியே நிலவுலகத்தைப் பார்த்தாள். அதன் காட்சியெல்லாம் அவளுக்கு மிக அழகாகத் தோன்றியது. ஏனெனில் தூரத்திலிருந்து பார்த்தால் நிலவுலகத்தினது அளந்தறிய முடியாத பரப்பும், பளிங்கு வட்டம் போல் அதனை மேலே மூடியிருக்கும் வானத்தின் அகற்சியும் சொல்லமுடியாது அவ்வளவு வனப்போடு விளங்கும். அன்றியும், அங்கே மரக்கல

மிரண்டு கடலிற் போவதையும் கண்டாள். வெகு தூரத்திலிருந்தபடியால் அவை இரு மீன்கொத்திப் பறவைபோல் தோன்றின. கடலிலே கடற்பன்றி கரணமடித்தன. திமிங்கிலம் நீரை மேலே உமிழ்ந்தன. அக்காட்சி நீரூற்றிலிருந்து ஆயிரக் கணக்கான நீர்த் திவலை மேலே சீறி எழுவது போல் இருந்தது.

இஃதிவ்வாருக, வந்தது ஐந்தாவது சிறுமியின் முறை மாரிக்காலத்திற் பிறந்தவளாகையால் அவள் கடலின் மேற்புறத்துக்கு ஏறவேண்டிய நாளும் மாரிக் காலத்திலேயே இதனல் மற்றச் சகோதரியரிலும் அதிக சிறப்புடைய காட்சிகளை அவள் காணக்கூடியதாய் இருந்தது. கடலெங்கும் நீலநிறமாய்த் திகழ்ந்தது அதற்குமேல் பெரிய உறைபனிப் படலம் மிதந்து ஓடிக்கொண்டிருந்தன. அவை முத்துப்போல் வெள்ளை நிறம் ஒவ்வொன்றும் மனிதர் கட்டும் கோபுரங்களிலும் உயரம் பலவகை உருவங்களோடு மிளிர்ந்தன. அவற்றுள் மிகப் பெரிய படலமொன்றில் அவள் போய் அமர்ந்திருந்தனள். அப்படலத்தைக் காணுது அதற்கு எதிராக வந்த மரக்கலங்கள் பல சடுதியில் அதைக் கண்ணுற்றுத் தம் மார்க்கத்தை மாற்றி விசையாய் ஓடின அவ்விசையினுல் எழுந்த இளங்காற்று அவள் கூந்தலை அசைத்தது. அன்றிரவு சட்டென்று கருமுகில் வானதைத வந்து மூடியது. அதன்பின் மின்னல் மின்னியது. இடியும் இடித்தது அப்பொழுது மலைபோல உயரமான அவ்வெண்ணிற உறைபனிப் படலங்களைச் சடுதியில் கருநிறமடைந்த கடல் வேகமாய் மோதியடித்து உயர்த்தியும் தாழ்த்தியும் அசைத்துக்கொண்டிருந்தது. அடிக்கடி உண்டாகும் மின்னல்

ஒளியினுல் இக்காட்சி கண்ணுக்குத் தெரிந்தது. மின்ஞெளி கடலெங்கும் கொடிபோல் வளைந்து வளைந்து ஓடிக்கொண்டிருந்தது. இதை அச்சிறுமி அச்சமின்றிப் பனிக்கட்டிப் படலத்தில் இருந்தவண்ணமே உற்று நோக்கினுள்.

நீரரமகளிர் சிறுமிகளாய் முதன்முதல் கடலடியினின்று மேல்வந்து இந்நிலவுலகத்தைப் புதிதாகக் காணும்போது அங்கே தாம் காணும் பொருட்களின் அழகில் மயங்கி விடுவர். ஆனுல் விரும்பியபோதெல்லாம் கடலின் மேற்புறம் ஏறக்கூடிய இளமங்கைப் பருவம் வந்தவுடன் அப்பொருட்களில் அவர் முன்போல மயங்குவதில்லை. மேற்புறம் வந்தால், கடலின் அடியிலுள்ள தமது மாளிகைக்குப் போய்ச் சேருவது எப்போது எப்போது என்று ஆவலோடு இருப்பர். சிறிது காலத்தின் பின்னர் வீடுபோலத் திறமான இடம் வேறெங்குமில்லை எனச் சொல்லிக்கொண்டு அங்கிருந்து வெளியேற விரும்பார்.

ஒவ்வொரு நாளும் பின்னேர வேளை சகோதரியர் ஐவரும் ஒருவரோடொருவர் கை கோத்தவண்ணம் கடலின் மேற்புறம் வந்து சேருவர். அவருடைய குரலோசை மிகவும் இனியது. நிலவுலகத்து மக்கள் ஓசையினும் பன்மடங்கு இனிமை. மரக்கலங்கள் பெரும் புயலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் வேளையில் அவர் அவைக்கருகே நீந்திச் சென்று கடலடியிலுள்ள அழகை வருணித்துக் கனிவாய்ப் பாடுவார். "கப்பல் உடைந்தால், மாலுமிகளே! கீழே கடலுக்குள் இறங்க அஞ்ச வேண்டா; கடலினடியில் அழகிய உலகொன்றுண்டு;

அங்கே வந்து சேர்ந்தால் இன்பமாய் உயிர் வாழலாம்,'' என்று பொருள்படும் இனிய பாட்டுக்களை இன்னிசையோடு பாடுவர். ஆனால் கப்பலோட்டிகளுக்கோ அவர் மொழி விளங்குவதில்லை. அப்பாட்டின் இன்னிசையைப் புயற்காற்றின் ஒலியென நினைப்பர். கடலடியில் இருக்கும் அதிசயங்களைக் கடலோச்சுவோர் பார்த்ததேயில்லை. ஏனெனில் கப்பல் உடைந்தவுடன் அவர் கடல் நீரில் அமிழ்ந்தி இறந்துவிடுவர். அதனால் அவர் உயிரோடு அங்கே செல்வதில்லை. உயிரில்லா உடல்மட்டுமே கடலரசன் மாளிகையைப் போய் அடைகின்றது.

இவ்வண்ணம் கை கோத்தவாறு அவர் அலைக்கூடாக நீந்திப் போகும்போது ஆக இளைய குழந்தை தனிமையாய் வீட்டிலிருந்தவாறே அவரை இமை கொட்டாது பார்ப்பாள். தன் சகோதரியர் தன்னைத் தனிமையாய் விட்டுப் போவதை நினைத்துச் சில வேளைகளில் அழ விரும்புவாள். ஆனால் நீர் வாழ்வாருக்குக் கண்ணீர் இல்லை. அதனால் அவள் அழ முடியாது. இக்காரணத்தால் கவலை வந்தால் அவர் எம்மிலும் மிகத் துன்பமடைவர். ''எனக்குப் பதினைந்து வயது இப்போது ஆனாலோ! மேலே இருக்கும் நிலவுலகத்தையும் அங்கு வாழ்மக்களையும் பார்க்க எனக்கு இருக்கும் ஆசைக்கோர் அளவில்லை. அவ்வுலகைக் கண்டால் என் மனம் மிகுந்த இன்பம் எய்தும். இது உண்மை, உண்மை,'' என்று இவ்வாறு தனக்குள் கூறிக் கொள்வாள்.

சிலகாலஞ் சென்றபின் அவளுக்குப் பதினையாண்டு நிரம்பியது. அவ்வண்ணம் ஆயதும் அன்று அவள்

பாட்டி அவளை அழைத்து, "குழந்தாய்! இன்று உனக்குப் பதினைந்து வயது ஆகின்றது இனி நீ உன் விருப்பப்படி எங்கும் போய் வரலாம். இங்கே வா. உன் சகோதரியரைப்போல உனக்கு அழகாக உடுத்தி விடுகின்றேன்" என்று கூறினள். இவ்வாறு கூறி விட்டு அவள் தலையை அலங்கரித்து அதில் அல்லி மலர் தொடுத்த ஒரு மாலையைச் சூட்டினள் அம்மலரின் ஒவ்வோரிதழும் முத்தினுலாயது. இதன்பின் எட்டுப் பெரிய முத்துச் சிப்பிகளை எடுத்து அவள் வாலிற் கட்டிவிட்டனள். இது அவள் உயர்குடிப் பிறப்பைக் காட்டுவதற்காக. "பாரமாயிருக்கின்றது, பாட்டி. இவை எனக்கு வேண்டாம்" என்ருள் சிறுமி. "அதற்கென்ன செய்வது. அழகு வேண்டுமென்ருல் கொஞ்சத் துன்பமும் அடையத்தானே வேண்டும்". என்று பாட்டி பதில் இறுத்தாள். சிறுமிக்கோ அவ்வணிகலன்களைக் சுழற்றி எறிய விருப்பம். இவை யாவற்றுள்ளும் தன் தோட்டத்திலுள்ள செம்மலர்களே தனக்கு மிக அழகு என்று எண்ணினள். ஆயினும் என் செய்வது. பாட்டியிடம் கொண்ட பயத்தினுல் அவள் அங்ஙனஞ் செய்யத் துணியவில்லை. "போய் வருகிறேன், பாட்டி," என்று சொல்லி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு ஒரு நீர்க்குமிழ் எவ்வண்ணம் நீருக்கூடாக மேல் எழுமோ அதுபோல விரைவாய் எழுந்து கடலின் மேற்பாகத்தை வந்தடைந்தாள்.

அவள் மேற்புறம் வந்து அலையினின்று தலையை உயர்த்தியபோது பொழுது படுகின்றவேளை. ஆனுல் வானத்தில் செக்கர் நிறம் இன்னும் அழியவில்லை. அதன் நடுவே மாலைவெள்ளி மிக்க பிரகாசத்தோடு

துலங்கிற்று. அவள் வந்து ஏறிய இடத்துக்கருகில் ஒரு பெரிய மரக்கலம் மெல்ல அசைந்து கொண்டிருந்தது. ஒரு பாய் மட்டும் அதில் விரித்திருந்தது. காற்றோட்டம் அடியோடில்லை. மாலுமிகள் பாய்மரத்திலும் கயிற்றிலும் சாய்ந்து கொண்டு நின்றனர். கப்பல் மேற்றளத்திற் சிலர் வாத்தியம் வாசித்தனர். சிலர் பாடினர். பின்னர் இருளத் தொடங்கியது. பல நிறங்களுள்ள ஆயிரக் கணக்கான விளக்குகளை மரக்கலமெங்கணும் ஏற்றினர். அவற்றைப்பார்த்த போது உலகத்திலுள்ள எல்லாத் தேசத்தாரின் கொடிகளும் ஓரிடத்தில் காற்றில் அசைந்துகொண்டிருப்பது போலத் தோன்றிற்று. அச்சிறுமி நீந்திக்கொண்டு அம்மரக்கலத்திலுள்ள ஓர் அறையின் சாளரத்தருகில் சென்றாள். அலை வந்து தன்னை மிதத்துப்போதெல்லாம் அந்தச் சாளரத்தின் கண்ணாடிக்கூடாக அறைக்குள் எட்டியெட்டிப் பார்த்தாள். அங்கு அலங்காரமான உடையணிந்து களிப்போடு உரையாடிக்கொண்டிருக்கும் மக்கட் கூட்டம் ஒன்று இருந்தது. அக்கூட்டத்துள்ளார் யாவரிலும் ஒருவனே மிக்க அழகுடையவனாய் விளங்கினன். அவன் ஓர் அரசிளங்குமரன். அவன் கண்கள் கரியன. அவனுக்கு வயது பதினாறு இருக்கும். அன்றுதான் அவன் பிறந்தநாள், அதற்காகவே இவ்வளவு கொண்டாட்டம். மரக்கலத்தின் மேற்றட்டில் மாலுமிகள் கூத்தாடிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தின் பின் அவ்வரசிளங்குமரனும் அங்கு வந்து சேர்ந்தனன். அப்போது அங்கு கொளுத்திய ஆகாய வர்ணங்களினின்று நூற்றுக்கணக்கான மத்தாப்பு ஒளிர்ந்து கொண்டு வானத்தைக் கிழித்து மேலே எழுந்தன.

எங்கும் பட்டப்பகல்போல் ஓரே வெளிச்சம். இதைக் கண்ட சிறுமிக்குப் பயம் வந்து விட்டது. உடனே தண்ணீருக்குள் தாழ்ந்து விட்டாள். பின்னர் சற்று நேரத்தில் வெளியே வந்து பார்த்தபொழுது வானத்தி லிருக்கும் வெள்ளி முழுவதும் கீழே வந்து தனக்குச் சுற்றிலும் பொலுபொலென்று விழுவதுபோலிருந்தது. அப்படிப்பட்ட வாணவிளையாட்டை அவள் முன்னொரு போதும் கண்டிலள். பெரிய சூரியன் பல வட்டமாய் வேகத்தோடு சுழன்றுகொண்டிருந்தது. நெருப்பு மீன் கள் நீலவானை அளாவி ஓடின. குளம்போல் அசை வற்றிருக்கும் கடலில் இவை யாவும் பிரதிவிம்பித்தன. மரக்கலம் எங்கும் வெளிச்சமிட்டிருந்தனர். அதனால் அதிலுள்ள சிறு கயிறுகூடக் கண்ணுக்குத் தெரிந் தது. அம்மரக்கலத்திலே பயணஞ்செய்வோர் ஒவ்வொரு வரையும் அவள் காணக்கூடியதாய் இருந்தது. அவருள் அரசிளங்குமரன் சொல்லமுடியாத அழகுடன் விளங்கி னன். அன்றியும் புன்சிரிப்போடு ஒவ்வொருவருடனும் கலந்து பேசிக்கொண்டு உவகையோடு உலாவினன். அக்காட்சியையும் அவ்விரவையும் மேன்மேலும் அழகு செய்வது போலச் சங்கீதமும் எங்கும் பரந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

இரா நெடுநேரம் ஆகியபோதும் அச்சிறுமி அவ விடத்தை விட்டகலவில்லை. அவள் கண்கள் அம்மரக் கலத்தை விட்டும் அவ்வழகிய அரசிளங்குமரனை விட் டும் பெயர்ந்தில. பல வண்ணங்களோடு விளங்கிய விளக்குகளும் அணைந்துவிட்டன. வாண மத்தாப்பு களும் ஓய்ந்து விட்டன. பீரங்கி ஒலியும் நின்று விட்

டது. பேரலைகள் போடும் உறுமல் ஓசையன்றி அவ்விடத்து வேறோர் ஒலியுமில்லை. திரை மிக வேகமாய் அசைந்துகொண்டிருந்தது. எனினும் அச்சிறுமி நீருக்குள்ளே போகாது கடலுக்கு மேலேயே மிதந்துகொண்டிருந்தனள். மரக்கலத்தின் சாளரக் கண்ணுடியிலேயே அவளுக்குக் கண். இஃதிப்படி இருக்க, பாய்களை ஒவ்வொன்ருய் விரித்து மரக்கலம் அசைந்தசைந்து போகத் தொடங்கியது. இதற்கிடையில் காத்திராதவண்ணம் சடுதியாகக் கருமுகில் வானமெங்கும் பரவத் தொடங்கியது. தூரத்தில் மின்னலும் மின்னியது. அத்துடன் அலைகளும் பெருகத் தொடங்கின. இக்காரணங்களினுல் விரைவிற் பெரும்புயலொன்று அடிக்கும்போலத் தோன்றியது. இதை அறிந்ததும் மாலுமிகள் மரக்கலத்தின் பாயெல்லாவற்றையும் அவிழ்த்தனர். எனினும் திரை கடுமையாய் மோதியதால் அது புறத்துக்குப் புறம் சரிந்து சரிந்து தத்தளித்துக் கொண்டு வெகு வேகமாய் ஓடியது. பெரிய மலைபோல் அலைகள் எழுந்தன. அவை பாய்மரத்தை ஒருமிக்க மூடிவிடும் போலத் தோன்றின. ஆனுல் அம் மரக்கலம் ஓர் அன்னப் பறவை கடலிலே திரையைக் கிழித்துக்கொண்டு குறுக்கே ஓடுவதுபோல் விரைந்து சென்று, ஒவ்வொரு கணமும் திரைகள் அதை நோக்கி வரவர, அவற்றின் உச்சியில் மிதந்துகொண்டு ஓடியது. சிறுமி இக்காட்சியைக்கண்டு ஆனந்தமடைந்தாள். ஆனுல் மாலுமிகளோ கலங்கி ஏங்கிக்கொண்டிருந்தனர். சடுதியில் மரக்கலத்தில் இருநது ஓர் ஒலி எழுந்தது. இது மரக்கலம் திரையோடு மோதுண்டதால் அதன் அடிப்பலகை உடைந்த ஒலி. அதனேடு பாய்மரமும் முரிந்து கீழே

விழுந்தது. அப்பொழுது மரக்கலம் ஒரு பக்கத்துக்குச் சரிந்து ஓடியது. இதனால் நீர் கோலியது. இதைக் கண்டபின்புதான் அச்சிறுமிக்கு மரக்கலத்துக்கு வந்த அபாயம் விளங்கியது. மரக்கலத்தினது முரிந்த மரத் துண்டுகள் கடலிலே அங்குமிங்கும் பரவத் தொடங் கின. அவற்றில் மோதிக்கொள்ளாமல் தன்னைக் காப் பாற்றிக் கொண்டாள். எங்கும் இருள் அடர்ந்திருந் தது. அதனால் அவள் கண்ணுக்கு ஒன்றும் புலப்பட வில்லை. ஈற்றிலே ஒரு மின்னல் மின்னியது. அம் மின்னல் ஒளியினால் மரக்கலத்தில் என்ன நடக்கின்ற தென்று கண்டாள், வேறொன்றையும் கவனிக்காது அரசிளங்குமரனையே தேடினாள். அப்போது மரக்கலம் இரண்டாகப் பிளந்து ஆழத் தொடங்கியது. அத னுடனே அவனும் நீருக்குள் ஆழுவதைக் கண்டாள்.

அவன் கடலில் இறங்கிய இடம் தனது மாளி கைக்குக் கிட்டவே என்று முதலில் எண்ணி மகிழ்ச்சி யடைந்தாள். ஆனால் மனிதர் நீருக்குள் உயிரோ டிருக்க முடியாது என்ற நினைவு உடனே அவளுக்கு வந்தது. ஆகையால் தனது மாளிகைக்கு வருவதற்கு முன் இறந்து விடுவான் என்பதை உணர்ந்தாள். அவன் ஒருவேளை இறந்து விடுவானோ என்ற எண் ணம் அவளை வருத்தியது. அக்காரணத்தால் உடைந்த மரக்கலத்துண்டுகள் எங்கும் பரந்து நெருங்கியிருப்ப வும் அச்சமின்றி அவ்வரசிளங்குமரன் வீழ்ந்த இடத்தை நோக்கி விரைவாய் நீந்திச் சென்றாள். திரை மோதிப் பலமாய் அடித்ததால் அங்கே நீந்துவது அவ்வளவு இலகுவன்று. நீருக்குள்ளே தாழ்ந்தும் மிதந்தும் இடர்ப்பட்டு நீந்திச் செல்வதற்கு அரசிளங்குமரன்

வலியற்றுப்போனன். அவன் காலுங் கையும் களேப்பி னல் ஓய்ந்து விட்டன. கண்களும் மூடிவிட்டன. அவன் உயிருக்கு இடுக்கண் வரும்போல் இருந்தது. இந்தத் தறுவாயில் அவள் அவனருகில் வந்தாள். அவ்வாறு அவள் வராவிடின் அவன் இறந்திருப்பான். அவனை அணுகியதும் அவன் தலையை உயர்த்தி நீருக்கு வெளியே பிடித்துக் கொண்டாள். இவ்வண்ணம் இருவரும் இருக்க அலை மோதி அவரை அங்குமிங்கும் இழுத்துச் சென்றது. அன்று இரா முழுவதும் இந்த நிலையிலேயே இருந்தனர்.

பொழுது விடிந்ததும் புயல் ஓய்ந்தது. உடைந்த மரக்கலத்தில் ஒரு சிறு துண்டுகூட அங்கு இல்லை. தனது செந்நிறக் கதிர்களைப் பரப்பிக்கொண்டு சூரியன் கடலினின்று வெளியே எழுந்தான். அக் கதிர்கள் அர சிளங்குமரனுடைய முகத்திற்கு உயிரொளியைக் கொடுப்பனபோல் இருந்தன. ஆனல் இன்னும் அவன் கண் மூடிய வண்ணமாகவே இருந்தான். இதைக் கண்டதும் அச்சிறுமி அவனது அழகிய முகத்தில் ஒரு முத்தமிட்டுத் தனது கையால் அவன் கூந்தலை மெல்லெனத் தடவி மேலே உயர்த்தினள். அப்பொழுதே அவனின் உருவம் கடலினது அடிப்பாகத்தில் தனது தோட்டத்தில் வைத்திருக்கும் வெண்கல் உருவம்போல் இருப்பதைக் கண்டாள். பின்னும் ஒருமுறை அவ னைத் தழுவி முத்தமிட்டு, அவன் உயிரோடு தப்பிப் பிழைக்க வேண்டுமென்று ஆவல் கொண்டாள்.

தனக்கெதிரே கரை இருப்பதை இப்பொழுதுதான் கண்டனள். அங்குள்ள கரிய பெரிய மலையின்

உச்சியில் பனி உறைந்து வெண்ணிறமாக விளங்கிக் கொண்டிருந்தது. இதனுல் தூரத்தினின்று அம்மலை உச்சிகளைப் பார்க்கும்பொழுது அங்கு பாலினும் வெண்மையான அன்னப்பறவைகள் கூட்டங் கூட்டமாய்ப் படுத்திருப்பது போலத் தோன்றும். கரையோரமாய்ப் பெருங்காடு அடர்ந்திருந்தது. காட்டின் எல்லையில் ஓர் உயர்ந்த கட்டிடம் தெரிந்தது. அது ஒரு கோயிலோ அல்லது மாளிகையோ என்று அவள் ஐயுற்ருள். இக் கட்டிடத்துக்குப் பக்கத்தில் ஒரு தோட்டம் இருந்தது. அங்கு எலுமிச்சை, தோடை முதலிய மரங்கள் உண்டு. இவ்விடத்திலே கடல் போய் வளைந்து ஒரு சிறு குடா வடிவாய் இருந்தது. அங்கே தோன்றும் கற்களுக்கு நடுவில் காலை வைத்தால் அது போய் வெண்மணலிற் படும். இவற்றைக் கண்ணுற்றதும் அவள் அரசிளங் குமரனை அணைத்துக்கொண்டு அக் குடாவுக்கு நீந்திச் சென்ருள். கரையை அடைந்த பின்னர் அவன் உடலில் இளவெய்யில் படும்வண்ணம் அங்குள்ள வெண்மணலில் அவனைக் கிடத்தினுள்.

இப்படியிருக்க, மேற்கூறிய கட்டிடத்தில் மணி அடித்தது. அப்போது இளம் பெண்டிர் பலர் அதற்கு முன்னிருக்கும் தோட்டத்துள் வந்தனர். இத் தோட்டம் அவள் இருந்த இடத்துக்குக் கிட்ட உள்ளதால் தன்னை அவர் காணுதபடி கடலில் இருந்த ஒரு கல்லுக்குப்பின் போய் ஒளித்துக் கொண்டனள். தனது தலையையும் மார்பையும் கடல் நுரையால் மறைத்தனள். அங்கிருந்தவண்ணம் அவரில் யாராவது அரசிளங்குமரன் கரையிற் கிடப்பதைக் காண்பரோ என்று உற்று நோக்கிக்கொண்டிருந்தனள். சற்று நேரத்தின்

பின் இளம்பெண் ஒருத்தி தற்செயலாய் அரசிளங் குமரன் கிடந்த இடத்துக்கு வந்தனள். அவன் அங்கு கிடப்பதைக் கண்டதும் அவள் பயந்து கூச்சலிட்டுத் தன் தோழியரைக் கூவியழைத்தனள், அவர் யாவரும் அங்கு வந்தபின் சிறிது நேரத்தில் அரசிளங்குமரன் மயக்கந் தெளிந்து தன்னைச் சூழ்ந்து நிற்கின்ற யாவரையும் பார்த்துப் புன்னகை புரிந்தான். நீரரமகள் அதைக் கண்டனள். "என்னைமட்டும் பார்த்து இவர் புன்னகை செய்திலர். யான் இவரை உயிரோடு காப்பாற்றியதை அறிந்திலர் போலும்" என எண்ணி அவள் மிகவும் துன்பமுற்றாள். அங்கு வந்த இளம் பெண்டிர் அவனை அக்கட்டிடத்துள்ளே தூக்கிச் சென்றனர். இதைக் கண்டதும் மிக்க துயருடன் திரும்பித் தனது தந்தையின் மாளிகைக்குப் போவதற்கு நீருக்குள் ஆழ்ந்தனள்.

இயற்கையாய் அவள் ஆழ்ந்த சிந்தையுடையவள். ஒருவரோடும் மிகுதியாகப் பேசுவதில்லை. இது நிகழ்ந்த பின் அவள் முன்னரிலும் பார்க்க மௌனம். அவள் திரும்பிப் போனதும் சகோதரியர் "மேலே நிலவுலகத்தில் என்ன என்ன கண்டாய்? அதை எமக்குக் கூறு" என்று அவளைக் கேட்டனர். அதற்கு அவள் ஒன்றும் பேசாது அகன்று வேறிடம் சென்றனள்.

அன்று தொடக்கம் ஒவ்வொரு நாளும் காலை மாலை நேரங்களில் அவள் அரசிளங்குமரனைத் தான் கொண்டு போய்க் கிடத்திய இடத்துக்குப் போய்வருவாள். அப்பொழுது அங்குள்ள தோட்டத்திலே மரங்களிற் பழுத்துத் தூங்கும் பழங்களையும், கீழே விழுந்தவற்றை

அங்குள்ளோரர் பொறுக்குவதையும் காண்பாள். அன்றியும் மலையிலிருந்து உறைபனி உருகிவிழும் காட்சியையும் காண்பாள். ஆனல் அரசிளங்குமரனையோ காண்பதில்லை. அதனுல் தனது மாளிகைக்குத் திரும்பிப் போகும்போதெல்லாம் மிகுந்த கவலையோடு செல்வாள். மற்றவேளைகளில் அவள் தனது தோட்டத்துக்குட் சென்று அங்குள்ள அழகிய வெண்கற்சிலை அவ்வரசிளங்குமரனைப் போன்றதாகையால், அதைத் தன் இருகையாலும் அணைத்துத் தழுவுவாள். இஃதொன்றுதான் அவள் மனவருத்தத்துக்கு ஓர் ஆறுதல். அங்குள்ள பூங்கொடிகளெல்லாம் தாறுமாருய் வளர்ந்து அருகிலுள்ள மரங்களிற் படரத்தொடங்கின.

அவள் இப்படி எத்தனை நாள் அவ்விரகசியத்தை மறைத்து வைத்திருப்பது? பொறுக்க முடியாது ஒருநாள் தனது சகோதரி ஒருத்திக்கு அதனைச் சொன்னுள். மெல்ல மெல்ல மற்றும் சகோதரியருக்கும் அது வெளித்து விட்டது. அவர்மட்டுமன்றி வேறு இரு வீரரமகளிருக்கும் அது படிப்படியாகத் தெரிய வந்தது. பின்பு அவர் தமது நெருங்கிய தோழியர் இருவருக்கும் அச் செய்தியை வெளியிட்டனர். அவருள் ஒருத்திக்கு அவ்வரசிளங்குமரனைத் தெரியும். அவளும் அவனை அன்று அம்மரக்கலத்திற் பார்த்திருந்தாள். அவன் எங்கிருந்து வந்தான் என்பதும் எந்தத் தேசத்துக்கு உரியவன் என்பதும் அவளுக்குத் தெரியும்.

ஒருநாள் தம்முடன் வரும்படி அவ்வரசிளங்குமரியர் யாவரும் அச் சிறுமியை அழைத்துக்கொண்டு ஒவ்வொருத்தியும் மற்றவளது இடையைக் கையினுற்

கோத்துப் பிடித்தவண்ணமாய் நீந்திச் சென்று அவ்வர சிளங்குமரன் வசிக்கும் மாளிகைக்கு முன்னர் கடலின் மேற்புறத்தில் வெளிக்கிளம்பினர்.

இம்மாளிகை ஒருவகை மங்கலான மஞ்சட் கல்லாற் கட்டியது. அங்கு வெண்கல்லினாற் கட்டிய படிக்கட்டுப் பலவுள அவற்றிலொன்று கடல் நீரை மருவியுள்ளது. அன்றியும் மாளிகையின் மேற்புறத்திற் பல தூபிகள் உண்டு. அவை பொன்னிறம். அதைச் சுற்றியுள்ள சுவர்களிற் பல வெண்கல் உருவங்கள் உள. அவை பார்வைக்கு உயிருள்ளவை போலத் தோன்றும். சாளரக் கண்ணாடிக்கூடாக அறைகளை எட்டிப்பார்த்தால், அழகாய்த் தொங்கிக் கொண்டிருக்கும் பல தொங்கலாடைகளையும் பட்டுத் திரைகளையும் காணலாம். சுவர்களிற் கண்ணைக் கவரும் வனப்புடைய படங்கள் தூங்கும் அங்குள்ள பெரிய அறை ஒன்றின் நடுவில் ஒருவித நீரூற்று உண்டு. அது வீசும் நீர் கண்ணாடியால் வேய்ந்த அம் மாளிகையின் குடை உருவமுள்ள முகட்டிற் போய் அளாவும். அம் முகட்டால் சூரியனது ஒளி அதற்றுட்சென்று அங்கு வைத்திருக்கும் தாழிகளில் வளரும் பூஞ்செடிகளில் விழும்.

மற்றைய அரசிளங்குமரிகள் காட்ட, அச்சிறுமி அவ்வரசிளங்குமரன் வசிக்கும் மாளிகையை அறிந்து கொண்டாள். அதன்பின்பு இரவுபகலென்று பாராமல் பலமுறை கரைக்குக்கிட்ட வெகுதூரம் நீந்திக்கொண்டு வருவாள். அவள் போகுந்தூரமளவு அவள் சகோதரியர் ஒருக்காலும் போயறியார். கடலிலிருந்து மாளி

கைக் கருகே ஒரு சிறிய கால்வாய் ஓடுகின்றது. அக் கால்வாய்க் கூடாகவும் பலமுறை நீந்திச்சென்று மாளிகையின் நிழலிலே மறைந்து நின்று அங்கு நிலாவில் அரசிளங்குமரனைக் கண்கொட்டாது பார்ப்பாள். ஆனால் அவனுக்கோ அவள் நிற்பது தெரியாது. தான் தனிமையாகவே இருப்பதாக எண்ணிக் கொள்வான். கொடி உயர்த்திய அழகிய ஓடமொன்றில் பின்னேர வேளைகளில் அவன் கடலில் ஓடித் திரிவது வழக்கம். அப்போது அவள் அங்கே கடலில் வளர்ந்திருக்கும் நாணற் புல்லுக்குள் மறைந்து நின்று, அவனை நோக்கி இன்புறுவள்

இரவிலே கடலில் வெளிச்சம் ஏற்றிய படகுகளில் இருந்து மீன்பிடிப்பவர் அவ் வரசிளங்குமரனைப்பற்றித் தமக்குள் என்றும் நல்வார்த்தை பேசிக் கொள்வதைப் பலமுறையும் கேட்டனள். அந்நேரங்களில் குற்றுயிராய்க் கடலலையிலே அவன் மிதந்து கொண்டு வந்த பொழுது அவன் உயிரைத் தான்றானே காப்பாற்றியது என்று எண்ணியெண்ணி உவகை எய்துவள். அவனது தலையை நீரினின்றும் உயர்த்தித் தனது மார்போடணைத்துக் கொண்டு இருந்ததும், பின் அவன் கன்னத்தில் முத்தமிட்டதும், அவள் நினைவுக்குப் பலமுறையும் வரும். ஆனால் அரசிளங்குமரனோ இது ஒன்றையும் அறியான. கனவிலேகூட அவளைக் கண்டிலன்.

இக்காரணங்களால் அவளுக்கு நிலவுலகத்தில் வாழும் மக்களில் விருப்பு வரவரக் கூடிக்கொண்டே வந்தது. அதனால் அவரோடு கூடிப் பழகுவதற்கு மிக

வும் விரும்பினுள். நீருலகத்திலும் நிலவுலகமே சிறந்தது என்னும் எண்ணம் அவளுக்கு உண்டாயது. ஏனெனில் அங்குள்ள மக்கள் வெவ்வேறிடத்திற்கு மரக்கலங்களில் ஓடித்திரிய முடியும். முகிற்கூட்டமும் அடைய முடியாத அவ்வளவு உயரமான மலை உச்சிகளுக்குக் கூட அங்கு வாழ்வோர் ஏறுவர். காடும் வயலும் ஒன்று சேர்ந்து தோன்றும் நிலப்பரப்பு என்ருலோ கண்ணுக்குத் தெரியாத தூரத்துக்கு அப்பாலும் அகன்று போகும். அங்குள்ள பொருட்கள் யாவற்றையும் பற்றி அறிய அவளுக்கு மிகுந்த ஆசை. அவற்றைக் குறித்துத் தன் சகோதரியரை வினவுவாள். அவரும் தெரிந்தாலல்லவோ அவள் கேள்விகளுக்கு விடையிறுக்க முடியும். பின், நிலவுலகத்தைப் பற்றி நன்ருய் அறிந்த தன் பாட்டியை வினவி ஐயந் தெளிந்து கொள்வாள்.

“நிலவுலகத்தில் வாழும் மனிதர் நீரில் அமிழ்ந்தாற்ருன் இறப்பதா? அப்படி அவர் அமிழ்ந்தி இறவாவிட்டால் எப்போதும் உயிரோடிருப்பாரா? அல்லது கடற்கீழ் வாழும் எம்மைப் போலத்தான் அவரும் இறந்துவிடுவாரா?” இவ்வாறு ஒருநாள் பாட்டியைக் கேட்டாள். அதற்குப் பாட்டி பின் வருமாறு விடையிறுத்தாள்: “ஆம், அவரும் எம்மைப் போலவே இறந்துவிடுவர். எப்பொழுதும் உயிரோடு இருப்பதில்லை. ஆனுல் அவர் உயிர் வாழ்க்கை எமது உயிர் வாழ்க்கையிலும் மிகக் குறுகியது. யாம் முந்நூறு ஆண்டு உயிர்வாழ முடியும். எமது உயிர் வாழ்வு முடிந்ததும் கடல் நுரையாக மாறிவிடுவோம். எமக்கு அன்பாயிருந்து இறந்தவர் மத்தியில் எம்மை

அடக்கஞ் செய்வதுமில்லை; அடக்கிய இடத்திற் கல்லறை கட்டுவதுமில்லை; அல்லது நடுகல் நாட்டுவதுமில்லை. எம்முடலோடு எமது உயிரும் அழிந்துவிடும். அதனால் இறந்தபின் வேறு பிறவி யாம் எடுப்பதில்லை. எமது உயிர் வாழ்க்கை நாணற்புல் போன்றது. ஒருமுறை முரிந்தாற் பின்னர்த் தழைப்பதில்லை. ஆனால் நிலவுலக மனிதருக்கெனிலோ அழிவற்ற உயிருண்டு. உயிர்போக அவருடல் மட்டுமே பிடிசாப்பராய்ப் போகும். பின்னர் அவ்வுயிர் ஒளி மிளிருகின்ற வானத்திற் சென்று அங்குள்ள வெள்ளிகள்போல அங்கு நின்று விளங்கிக் கொண்டிருக்கும். எவ்விதம் நாம் நிலவுலகைப்பார்க்கக் கடற்கீழிருந்து மேலே போகின்றோமோ அவ்விதமே அவர் உயிரும் மேல் நோக்கிச் சென்று யாம் அறிய முடியாத பற்பல அண்டங்களை அடையும்.''

இதைக் கேட்டதும் அச்சிறுமி வாட்டத்தோடு, "எமக்கேன் அழிவில்லா உயிர் இல்லை? இந்நீருலகில் முந்நூறு ஆண்டு உயிர்வாழ்வதிலும் நிலவுலகிற் பிறந்து ஒரு பகலேனும் உயிர்வாழ்வது நன்று. ஏனெனில் இறந்த பின்னர் வானுலகத்தில் வசிக்கலாம் அல்லவா?" என்று கூறினள்.

"இவ்விதமான எண்ணம் உனக்கு வேண்டாம். யாம் இன்பமாய் வாழ்கின்றோம். அதுவே போதும். எமது இன்பமான வாழ்வுபோல் நிலவுலகத்து மக்களிற் பெரும்பாலோருக்கு இல்லை." என்று பாட்டி விடையிறுத்தாள்.

"அப்படியானால் யான் ஒருநாளைக்கு இறந்து ஒரு சிறு நுரையாய்த் தண்ணீரிலே மிதக்க வேண்டி

வருமோ? இப்படி ஆகும்பொழுது அலையின் இனிய ஒலியைக் கேட்டும் அழகிய பூக்களைப் பார்த்தும் மகிழ்தல் ஒழிந்துவிடுமே. அப்போது சூரியனது ஒளியைத் தானும் காண முடியாதா? இது என்ன? எவ்விதமாயினும் அழிவில்லாத உயிரை யான் பெற முடியாதா?" இவ்வாறு அதிக கவலையுடன் பாட்டியை வினவினள்.

அதற்குப் பாட்டி கூறியதாவது:- "முடியாது, முடியாது. ஆனால் அதற்கு ஒருவழிதான் உண்டு. அது எம்மாற் செய்ய முடியாது. அது எப்படியானால் நிலவுலகத்து ஆண்மகன் ஒருவன் உன்னைக் காதலிக்க வேண்டும். தனது தந்தை தாயினும் மேலாக உன்னை நேசிக்க வேண்டும். தனது உள்ளம் முழுவதையும் உனக்கே கொடுத்து, உன் கையைத் தனது கையாற் பற்றி, இம்மைக்கும் மறுமைக்கும் உன்னையன்றி வேறொருவரையும் காதலிப்பதில்லை" என்று சொல்லிச் சத்தியஞ் செய்து தருவானேயானால், அவனுடைய உயிர் உன்னிடத்து வந்து தங்கும், அவ்வாறு நிகழுமானால் அவன் அடையப் போகும் பேரின்பத்தில் நீயும் பங்குபற்றுவாய். ஆனால் ஒன்று இப்படியெல்லாம் ஒருபோதும் நிகழாது. ஏனெனில் நீர்வாசிகளாகிய யாம் எமது மீன் வால் எமக்கு அழகு என எண்ணுகிறோம். நிலவுலகிலுள்ளாரோ இதை மிக அழகற்றதென நினைக்கின்றனர். அவர் அறிவில் மிகவும் குறைந்தவர். தம்மை நிறுத்திப் பிடிப்பதற்காக இரண்டு முட்டுக்கட்டை வேணுமாம். அவற்றைக் கால் எனப் பெயரிட்டுக் கொண்டு அவற்றைப் பற்றித் தமக்குள்ளே பெருமை பாராட்டிக் கொள்ளுவர்."

இவ்வாறு பாட்டி கூறி முடிந்தவுடன் அச்சிறுமி தனது மீன்வாலைப் பார்த்துப் பார்த்துத் துயரடைந்தவளாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள்.

அவள் மனநிலையை அறிந்த பாட்டி, "மூந்நூறு ஆண்டு யாம் உயிரோடு வாழ முடியும். அதே போதாதோ? அதை எண்ணி யாம் களிப்படைய வேண்டாமோ? உனக்குத் துயர் வேண்டாம். விட்டு விடு. நிற்க, இன்று எம் அரண்மனையில் பெரிய கொண்டாட்டம் ஒன்று நடக்கப் போகின்றது. நீ அழகாய் உடுத்து அலங்கரித்து அங்கு போதற்கு ஆயத்தமாய் இரு." என்று கூறி அவளை அனுப்பினள்.

இதைப் போன்ற ஓர் அழகிய கொண்டாட்டம் நிலவுலகத்தில் எக்காலமும் நடந்ததில்லை. கடலரசன் மாளிகையின் நடுப்புரத்தில் ஒரு வனப்புடைய நடன சாலை இருந்தது. அதன் சுவர்கள் பளிங்கினால் ஆயவை. அச்சாலையின் இரு பக்கங்களினும் நூற்றுக்கணக்கான முத்துச் சிப்பிகள் வரிசை வரிசையாகப் பதித்திருந் தன. இவைகளுட் சில பச்சை, சில சிவப்பு. இவற்றி லிருந்து ஒருவகை நீல ஒளி எழுந்து சாலை முழுவதை யும் துலங்கச் செய்தது. அன்றியும் அவ்வொளி அதன் பளிங்குச் சுவருக்கூடாகச் சென்று, கடலிலும் பரந்து விளங்கியது. சுவருக்கருகிற் பெருமீன்களும் சிறு மீன்களும் நீந்தி விளையாடித் திரிவதை அவ் வெளிச்சத்திற் காணலாம். அவ் வெளிச்சத்தினால் சில வற்றின் செதிள் நீலமாகவும் சிலவற்றின் செதிள் பொன்நிறமாகவும் சிலவற்றின் செதிள் வெள்ளிபோல வும் மின்னின. அச் சாலைக்கூடாக ஒரு நீரோடை

பாய்ந்துகொண்டிருந்தது. அதில் நீர்வாழ் ஆடவரும் அரிவையரும் இனிய பாட்டுக்களைப்பாடி நடனமாடினர். அவரைப்போல் இனிய குரலுள்ளவர் இந் நிலவுலகத்தில் யாவரும் இலர். அவர் யாவரினும் யாம் பேசும் நீரரமகளே மிக இனிமையாகப் பாடினாள். அவள் பாடி முடிந்ததும், உடனே அங்கிருந்தோர் அவள் பாட்டு மிகத் திறம் என்பதற்கறிகுறியாகக் கைதட்டி ஆர்ப்பரித்தனர். இதனாற் சற்றுநேரம் அவள் உள்ளம் பூரித்தது. நிலவுலகத்திலாவது நீருலகத்திலாவது தன்னைப்போல் இனிய ஓசையுள்ளவர் எவருமிலரென்று நினைத்துப் பெருமிதம் கொண்டாள். எனினும் சடுதியில் அவள் உள்ளம் அங்கிருந்து மேலேயுள்ள நிலவுலகத்துக்கு ஓடியது. ஏனெனில் இவ்வளவு ஆர்ப்பாட்டத்துள்ளும் பெருமகிழ்ச்சியுள்ளும்கூட அங்கே தான் கண்ட அரசிளங்குமரனை அவளால் மறக்க முடியவில்லை. அன்றியும் அவனுக்குள்ளதுபோல் அழிவற்ற உயிர் தனக்கு இல்லை என்ற துயரையும் மறக்க முடியவில்லை. இக்காரணத்தால் யாவரும் காணாதவண்ணம் மாளிகைக்கு வெளியே மெல்ல நழுவிப்போய்த் தனது தோட்டத்தை அடைந்து அங்கு ஒரு பக்கத்தில் மிகுந்த துயரோடு தனியே இருந்தாள். மாளிகைக்குள்ளேயே கொண்டாட்டம் பெரிய ஆரவாரங்களோடு நடந்துகொண்டிருந்தது.

இங்கு இவ்வாறு நடக்கும்போது நிலவுலகில் யாரோ ஒருவன் காட்டிலே வேட்டையாடும் ஆரவாரத்தினால் உண்டாகும் ஒலியொன்று நீருக்கூடாகச் சென்று அவள் காதில் விழுந்தது. உடனே அவள் இது யார் எழுப்பிய ஒலியென்பதை அறிந்தனள். யாரை யான்

தாய் தந்தையரிலும் மேலாகக் காதலிக்கிறேனோ, யாரிடம் என் எண்ணமெல்லாம் எப்போதும் குடிகொண்டு இருக்கின்றதோ, யாரிடம் என் வாழ்வின் இன்பத்தை அடைய எண்ணியிருக்கின்றேனோ அவரே இப்பொழுது மேலே நிலவுலகில் வேட்டையாடுகின்றார். அந்த ஆர்ப்பாட்டத்தினால் எழும் ஒலிதான் இது. என்று முடிவு கட்டினாள்.

இந்தவிதமாக எண்ணிக் கொண்டு அவள் ஆழ்ந்த துயரோடு சிறிதுநேரம் இருந்தனள். இறுதியில் பின்வருமாறு எண்ணுவள்: "எவ்வழியாலும் அவரை அடைந்து ஓர் அழிவில்லா உயிரைப் பெறுவதற்குத் துணிந்து கொண்டேன். இது திண்ணம். ஆனால் எப்படி அதைச் செய்து முடிப்பேன்? ஓகோ நன்று, நன்று, இங்கு வாழும் சூனியக்காரியிடம் போவேன். அவள் இதற்கு ஏதும வழி கூறுவாள். அவளிடம் யான் போவது யாருக்காவது தெரியாது இருத்தல் வேண்டும் என் சகோதரியர் இப்போது மாளிகைக்குள் நின்று நடனமாடுகின்றனர். ஆகவே அவளிடம் தனிமையாகச் செல்வதற்கு இதுதான் தக்க நேரம். சூனியக்காரியை நினைக்க எனக்குப் பெரிய அச்சம் வருகின்றதுதான். என்றாலும் என்ன செய்வது? அவளிடம் போனாற்றான் என் ஆசையை நிறைவேற்றுதற்கு வேண்டிய வழிவகை கண்டு பிடிக்க முடியும்."

இங்ஙனம் எண்ணி மனதைத் திடப்படுத்திக் கொண்டு அவள் தனது தோட்டத்தினின்றும் வெளியேறிச் சூனியக்காரி வசிக்கும் நீர்ச்சுழியை நோக்கிப்

புறப்பட்டாள். இதற்கு முன் அவ்வழியால் அவள் ஒருநாளும் போயறியாள். அந்நீர்ச்சுழியில் பூவாவது நீரில் வளரும் புல்பூண்டாவது இல்லை. அந்நீர்ச்சுழியை அடையும் வரையில் மங்கல் நிறமான மணலைத்தான் அங்கு காணலாம். ஓர் எந்திரத்தின் சில்லு நீருக்குட் சுழலும்போது நீர் எவ்விதம் வட்டமிட்டு வேகமாய்ச் சுழலுமோ அவ்விதமே அங்கும் அது சுழன்றுகொண்டிருந்தது. அதுமட்டுமன்றி, அது ஓவென்ற ஓசையோடு வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. சிக்கிய யாவற்றையும் கடலின் அடிக்கு இழுத்துச் சென்றது. சூனியக்காரியின் இருப்பிடத்தை அடைவதற்கு அச்சிறுமி இப் பயங்கரமான நீர்ச்சுழியைத் தாண்ட வேண்டும். அதன்பின் சூட்டினாற் கொதித்துக் குமிழிகள் கிளம்பிக் கொண்டிருக்கும் சேற்றுநிலம் ஒன்றுக்கூடாக நெடுந்தூரம் செல்லல் வேண்டும். கடலின் அடியில் ஓர் அதிசயமான காட்டுக்கு நடுவில் சூனியக்காரியின் குடிசை இருந்தது. அக்காட்டிலுள்ள மரஞ்செடி ஒவ்வொன்றும் உருவத்திற் பாதி மிருகமும் பாதி தாவரமுமாய் இருந்தது. இவற்றை அஃரைமா என்று கூறுவர். பல பாம்புகள் தம்முடைய நூற்றுக் கணக்கான தலைகளை நிலத்திலிருந்து மேலே உயர்த்திக் கொண்டு இருப்பதுபோல் அவை தோன்றின. அவற்றின் கிளைகள் புழுப்போல் வளையக்கூடியன. அவை நீண்ட விரல்களையுடைய கைகள் போன்றிருக்கும். அன்றியும் ஒட்டிக் கொள்ளக்கூடிய பிசுபிசுப்புடையன. அடி தொடக்கம் நுனிவரைக்கும் எப்பக்கமும் வளையக்கூடிய தன்மை அவற்றுக்கிருந்தது. தமக்குக் கிட்ட வரும் பொருள் யாவற்றையும் தப்பியோடாதபடி பிடித்துச் சுற்றிக் கொள்ளும்.

அந்நீரரமகள் அவற்றைக் கண்டதும் பயந்து போனாள். கிட்ட நெருங்க அவளுக்குக் கொஞ்சமேனும் துணிவு வரவில்லை. நெஞ்சு படபடவென்று அடித்தது. அங்கு நில்லாது ஓடச் சொல்லி அவள் உள்ளம் ஏவியது. ஆனால் அந்நிலையில் அரசிளங்குமரனைப் பற்றிய எண்ணமும் அழிவில்லா உயிரைப்பற்றிய நினைவும் அவள் உள்ளத்தில் உதித்தன. அவை அவளை அவ்வண்ணம் ஓடாது தடுத்தன. அன்றியும் அவற்றைக் கடப்பதற்கு வேண்டிய ஓர்மத்தையும் அளித்தன. அரைமா தன்னைப் பிடியாதவண்ணம் கூந்தலை ஒரு குடுமியாய் இறுக்கி முடிந்துகொண்டாள். பின்னர் தன் கைகளை ஒன்றன்மேலொன்று குறுக்காக வைத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டு மீன்போல நீருக்குள் விரைவாய் நீந்திச் சென்றாள். அரைமாவின் வளைந்த விரல்களையுடைய பெரிய கைகள் அவளைப் பிடிக்க முயலவும் அகப்படாது அவற்றுக்கூடாகக் கெதியாய் நழுவி ஓடினாள். அவற்றின் கை ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான விரல். அவ்விரல்களின் பிடி இரும்புச் சங்கிலியினும் வலியது. கடலிலே மரக்கலம் உடைந்து மாண்டவரின் வெள்ளெலும்புக்கூடுகளும், மரக்கலத்தின் சுக்கான் துண்டுகளும், பெட்டிகளும், நிலவுலகத்திலுள்ள மிருகங்களின் பிணங்களும், இன்னும் பல பொருட்களும் அவற்றின் கைகளுக்குள் இருந்தன. அதுவுமன்றி ஓர் இடத்தில் இளம் பருவமுள்ள நீரரமகள் ஒருத்தியைப் பிடித்து நெரித்து வைத்திருந்தன. யாவற்றிலும் இக்காட்சியே அவளுக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்தது.

அவ் வரைமா ஒன்றிலும் பிடிபடாமல் இவ்வண்ணம் விரைந்து சென்றபின் அவள் ஒரு வெளியை அடைந்தாள். அங்கே பல பெரிய கடற்பாம்புகள் உறுமிக்கொண்டும், தமது பயங்கரமான செங்கல்மங்கல் நிறமுள்ள வயிற்றைக் காட்டிக்கொண்டும் படமெடுத் தாடிக்கொண்டிருந்தன. அவ்வெளி நடுவில் கடலுள் மூழ்கி இறந்த மனிதரின் எலும்புகளினுற் கட்டிய வீடு ஒன்று இருந்தது. அதுவே சூனியக்காரியின் வீடு. சில வேளைகளில், தமது வாயிலிருந்து உணவைக் கொத்தித் தின்ன நாகணவாய்ப்புள்ளை மனிதர் விளையாட்டாக எப்படி விட்டுக்கொண்டிருப்பாரோ அப்படியே சூனியக்காரியும் தனது வாயிலிருந்து உணவை மெல்ல மெல்ல எடுத்தெடுத்துத் தின்னத் தேரை பலவற்றை விட்டுக்கொண்டிருந்தனள். அங்குள்ள பயங்கரமான கொழுகொழுத்த பாம்புகளை "குஞ்சுகாள்! இங்கே உங்கள் அம்மாவிடம் ஓடிவாருங்காள்" என்று அன்புடன் அழைத்து அவற்றைத் தனது மார்பிலேற்றி அவை அங்கு மண்டலமிட்டிருக்க வைத்துக்கொண்டு படுத்திருந்தாள்.

அச் சிறுமி அங்கு போயதும் சூனியக்காரி தனது படுக்கையிலிருந்தவாறே அவளுக்குப் பின்வருமாறு உரைத்தாள் :- "சிறுமியே! நீ எதை விரும்பி இங்கு வந்தாய் என்று எனக்குத் தெரியும். உன் விருப்பம் மிகவும் மடமையானது. என்றுலும் நீ விரும்பியதைச் செய்ய யான் ஆயத்தம். அழகிய அரசகுமாரியே, உன் எண்ணம் உனக்குத் தீமையே பயக்கும். நிலவுலகத்திருக்கும் அரசிளங்குமரனை அடைதல் வேண்டும். அழிவில்லா உயிரைப் பெறுதல் வேண்டும். உனது மீன்வால் மனி

தருக்கிருக்கும் இரண்டு முட்டுக்கட்டையாய் மாறவேண்டும் என்று விரும்புகின்ருயல்லவா ?" இவ்வண்ணம் கூறிக்கெக்கட்டமிட்டு ஒரு பயங்கரமான சிரிப்புச் சிரித்தாள். அச்சிரிப்பின் ஒலியைக்கேட்டு அஞ்சி அவள் மார்பிற் படுத்திருந்த தேரைகளும் பாம்புகளும் ஒன்றன்மேலொன்ருகப் புரண்டுருண்டு தொம்மெனக் கீழே விழுந்தன.

அவள் மேலும் தொடர்ந்து கூறியதாவது: "நல்லவேளை, நீ இன்று வந்தாய். ஏனெனில் நாளைக்காலை பொழுது காலித்ததின்பின் ஓராண்டு முடியும் வரைக்கும் என்ருல் உனக்கு உதவி செய்ய முடியாது இப்போது யான் உனக்கு ஒரு குடிநீர் காய்ச்சித் தருவேன். கிழக்கு வெளிக்குமுன் நீ அதனை நிலவுலகத்திற்குக் கொண்டு சென்று கடற்கரையில் இருந்தவண்ணம் குடித்தல் வேண்டும். அப்போது உன் மீன்வால் மனிதர் அழகென மதிக்கும் இரண்டு காலாக மாறும். உன்னை இருகூருக வாளால் வெட்டும்போது எவ்வித மான நோ ஏற்படுமோ அதே போன்று அந்த நேரம் உன்ருலே பொறுக்க முடியாத பெரிய நோ ஏற்படும். இப்படி உனக்குக் கால் வந்தபின் உன்னைப் பார்க்கும் எவரும் இவளைப்போல் அழகிய பெண்ணை யாம் இதுவரையும் கண்டதில்லை என்று எண்ணுவர். உனக்கு இருப்பது போன்ற அழகிய நடை வேறெவருக்கும் இருக்காது. நடன மாதரும் அதனைக் கண்டு ஆசைப்படுவர். ஆனல் நீ அடிவைத்துத் தரையில் நடக்கும்போதெல்லாம் கூரிய வாளின்மேலே நடக்கும்போது ஏற்படும் வருத்தம் உனக்கு உண்டாகும். இப்படியான துன்பம் உன்ருற் பொறுக்க முடியுமா? அப்படியானுற் சொல்லு. குடிநீரைத் தருகிறேன்."

அப்போது நீரரமகள் அரசிளங்குமரனையும் அழி வில்லா உயிரையும் எண்ணினள். நெடிதாலோசித்து விட்டுத் தழுதழுத்த குரலோடு "அவ்வருத்தத்தை யான் பொறுத்துக் கொள்ளுவேன் நீ சொல்லும் வண்ணம் செய்ய யான் சம்மதிக்கிறேன்" என்று நடுநடுங்கிக் கூறினள். பின்னும் ஒருமுறை சூனியக்காரி அவளுக் குக் கூறுவள்: "கவனம், நல்லாய் விளங்கிக்கொள். ஒரு முறை நீ மனித உருவம் எடுத்தால் நீரர மக ளிர் உருவத்தைப் பின்பு திருப்பிப் பெறலாம் என்று நினைக்காதே. கடலில் இறங்கி நீந்திச் சென்று உன் சகோதரியரிடம் போகவும் முடியாது; உனது தந்தை யின் மாளிகையைப் பார்க்கவும் முடியாது. அதுமட்டு மன்று. அவ்வரசிளங்குமரனுடைய காதலையும் நீ பெறு தல் வேண்டும். அப்போது உன் பொருட்டு அவன் தனது தாய் தந்தையரையும் மறந்து உன்னைக் காதலிக்கவேண் டும். அதன் பின்னர் ஓர் அந்தணன் உம்மிருவரையும் மணமுடித்து வைத்தல் வேண்டும். இவ்வாறு மணமக ளும் மணமகனுமாக நீவிர் இருவரும் ஒன்று சேர்ந்து வாழ்வீராயின் நீ அழிவில்லா உயிரைப் பெறுவாய். அவ்வாறன்றி அவன் வேறொருத்தியை மணப்பானாயின், அவன் மணமுடித்த மறுநாட் காலையிலேயே உன் உடல் இரு கூறாய்ப் பிளந்து கடல் நுரையாக மாறிவிடும்."

இறந்தவர் முகம்போலச் சிறுமியின் முகம் அச் சத்தினால் வெளிறியது. எனினும் "யான் அதற்குச் சம்மதிக்கிறேன்" என்று விடையிறுத்தாள்.

அப்போது சூனியக்காரி மறுபடியும் கூறுகின்றாள்: "யான் உனக்குச் செய்யும் இந்த உதவிக்குப் பதிலாக

நீ எனக்கு ஒரு பொருள் கொடுத்தல் வேண்டும். அப்பொருளோ விலை மதித்தற்கரியது. கடலின்கீழ் உள்ளவர் எவரிடத்தும் இல்லாத இனிய ஓசை உன்னிடத்து உண்டு. அவ்வினிய ஓசையினால் அரசிளங் குமரனை நீ இலகுவில் மயக்கிவிடுவாய். அதனை எனக்குத் தந்துவிடு. யான் உனக்குத் தரும் குடிநீர் நன்கு பலிப்பதற்காக என்னுடைய இரத்தத்தை அதற்குள் விட்டு நல்லாய்க் காய்ச்சுதல் வேண்டும். உனக்காக என் இரத்தத்தையும் இழந்துவிட நேரிடுகின்றது. ஆதலால் அரிய பொருளாயிருக்கும் உன் ஓசையை எனக்குத் தந்துவிடு."

இதற்கு நீரரமகள் என் "ஓசையை நீ எடுத்தால் பின்னர், என்னிடத்து மிஞ்சியிருப்பதென்ன? என்று கேட்டாள்.

அப்போது சூனியக்காரி கூறுவள்: "உன் அழகிய உடலம், அன்ன நடை, அகத்தினழகைக் காட்டும் கூரிய கண், இவையெல்லாம் உனக்குப் போதாவா? ஓர் ஆடவன் உள்ளத்தைப் பிணிப்பதற்கு இவற்றைத் தவிர வேறென்ன வேண்டும்? என்ன ஆலோசனை? உன் மனத்திடமெல்லாம் இவ்வளவோடு நின்று விட்டதா? சொல்லு. நாக்கை நீட்டு. என் குடிநீருக்கு விலைமாற்றாக அதை வெட்டியெடுத்துக் கொள்ளுகிறேன்."

சூனியக்காரி இவ்வாறு கூறியதும் அச்சிறுமி சிறிது ஆலோசித்துவிட்டு, "சரி, யான் நீ கூறுவதற்கு ஒத்துக்கொள்கிறேன்" என்று பதிலளித்தாள்.

அதன்பின்னர் அந்த ஆச்சரியமான குடிநீரைக் காய்ச்சுவதற்காகச் சூனியக்காரி அடுப்பில் ஒரு சட்டி வைத்தாள். "ஒவ்வொரு காரியத்திலும் யாம் சுத்த மாய் இருந்து கொள்ளுதல் வேண்டும். சுத்தமே யாவற் றுள்ளும் சிறந்தது," என்று சொல்லிக் கொண்டு அருகில் நின்ற ஒரு பாம்பைப் பிடித்து அதை வளைத்து ஒரு முடிச்சுப் போட்டாள். பின்னர் நெருப்பை எரித்துக் கொண்டு அம் முடிச்சாற் குடிநீரைக் கலக்கிக் கொண்டிருந்தாள், கொஞ்ச நேரத்தின் பின்னர் கத்தியினுலே தன் மார்பில் ஒரு காயம் உண்டாக்கி அதினின்று ஒழுகும் இரத்தத்தை அச் சட்டிக்குள் விட்டாள். அப்பொழுது அச் சட்டியிலிருந்து ஒரு விநோதமான புகை எழுந்தது. அதைப் பார்த்தாற் பயங்கரமாய் இருக்கும். அன்றியும் அவள் அடிக்கடி அதற்குள் ஒவ்வொரு சரக்குப் போட்டுக்கொண்டே இருந்தாள். அதன்பின் அக்குடிநீர் கொதிக்கத் தொடங்கியதும் அதிலிருந்து ஆமை அழும் ஓசைபோல் ஓர் ஒலி எழுந்தது. சிறிது நேரத்தின்பின் அடுப்பிலிருந்து அதை இறக்கி வைத்தாள். ஆறியவுடன் அது தண்ணீர் போலத் தெளிந்தது. அப்பொது சூனியக்காரி அந் நீரரமகளைக் கூப்பிட்டு "குடிநீர் காய்ச்சி முடிந்தது. இந்தா, எடுத்துக்கொள்", என்று சொல்லி அவள் கையில் அதைக் கொடுத்தனள். அதன்பின் அவளை நோக்கி, "நாக்கை நீட்டு, இதனுல் அதை வெட்டி எடுக்கின்றேன்" என்று கூறித் தனது கையிலிருந்த ஒரு கூரிய கத்தியினுல் அவள் நாக்கை அறுத்தனள். அன்றுதொட்டு அச்சிறுமி பேசவாவது பாடவாவது முடியாமற்போனது.

நாக்கை அறுத்த பின்னர் சூனியக்காரி அவளுக்குக் கூறுவள்: "இனி நீ போகலாம். யான் கூறிய வண்ணம் யாவற்றையும் தவறுது செய்துகொள். உனது எண்ணம் கட்டாயம் கைகூடும். அன்றியும், நீ திரும்பி இக் காட்டுக்கூடாகச் செல்லும்போது அரைமா உன்னைப் பிடிக்க முயலும். அதற்கு நீ சிறிதும் பயப்படாதே. அவ்வாறு பிடிக்கத் தம்முடைய கைகளை நீட்டினுல் இந்தக் கசாயத்திற் கொஞ்சம் தெளித்து விடு; அப்போது அவற்றின் கைகள் ஆயிரம் துண்டுகளாய் முரிந்துபோம்."

இவை யாவற்றையும் கேட்டுக்கொண்டு சிறுமி சூனியக்காரியின் குடிசையை விட்டுத் திரும்பினுள். அவ்வாறு திரும்பி வரும்போது அவள் கையிலே மின்போல விளங்கிக்கொண்டிருக்கும் அக் குடிநீரை அரைமாக்கள் கண்டன. கண்டதும் அஞ்சி அவை தம் கையை ஒடுக்கிக் கொண்டன. இதனுல் அக்காட்டுக்கூடாக அச்சிறுமி ஓர் இடையூறுமின்றி விரைந்து சென்ருள். ஒரு கணப்பொழுதில் சேற்று நிலத்தையும் நீர்ச்சுழியையும் கடந்தாள்.

அதன்பின் தனது தந்தையினது மாளிகைக்கு அருகே சென்று அதை உற்று நோக்கினள். அங்கே சாலையில் ஏற்றியிருந்த விளக்கு யாவும் அணைந்துவிட்டன. யாவரும் தூங்கும் நேரமாகையால் விளக்கைக் காணபது எப்படி? இப்பொழுது அவள் தான் பேச முடியாதிருப்பதால் அங்கு உட்செல்ல விரும்பவில்லை. இனிமேல் அம்மாளிகைக்குத் திரும்பிச் செல்லாது நிலவுலகுக்குப் போவதற்கே துணிந்து விட்டாள். எனி

னும் தன் உள்ளத்தில் ஏதோ ஒரு வருத்தம் இருப்ப தாக அவளுக்குத் தோன்றியது. உடனே தோட்டத் திற்கு விரைந்து சென்று தன் சகோதரியரது பாத்தி களில் வளரும் பூக்களிற் கொஞ்சம் கொஞ்சம் பறித்து எடுத்துக்கொண்டாள். பின்னர் மாளிகையை நோக் கிக் கையசைத்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டு கடலுக்கூடாக நீந்திச் சென்றாள்.

இவ்வாறு நீந்திக்கொண்டு சூரியன் எழுமுன் அர சிளங்குமரனது மாளிகைக்கருகில் வந்து சேர்ந்தாள். வந்ததும் அம்மாளிகையினது வெண்கல்லாற் கட்டிய படிக்கட்டொன்றில் ஏறி இருந்தாள். அப்போது அங்கு நிலா வெகு அழகாய் எறித்தது. பின்னர் அந்தக் குடி நீரை எடுத்துக் குடித்தனள். உடனே அவளது மிருது வான உடம்பிலே கூரிய வாளினால் வெட்டுவதுபோன்ற வருத்தம் உண்டாயிற்று. அதனால் இறந்தவள் போலக் குப்புறக் கீழே விழுந்தாள்.

இந்த நிலையில் நெடுநேரம் கிடந்தாள். பின்பு கிழக்கே சூரியனது கதிர் சிறிது சிறிதாகத் தோன்றத் தொடங்கின. அப்பொழுதே அவளுக்குச் சிறிது அறிவு வந்தது. உடம்பு நோ இன்னும் மாறவில்லை. எனி னும் மெல்லத் தனது கண்களைத் திறந்து பார்த்தாள். அப்பொழுது தனக்கு முன்பாக அவ்வழகிய அரசிளங் குமரன் தன்னை உற்று நோக்கிக் கொண்டு நிற்ப தைக் கண்டாள். அதனால் நாணமுற்றுக் கீழே பார்த் தாள். அவ்வாறு பார்த்ததும் தனக்கு மீன்வால் இல் லாது அதற்குப் பதிலாகக் காலிரண்டு இருப்பதைக் கண்டாள். அவை அழகிய பொன்னிறத்தோடு விளங்

கின. அவ்வளவு அழகிய கால்கள் பெண்கள் யாருக் காவது இருந்ததில்லை. உடனே தான் ஆடையில்லா திருப்பதை அறிந்து நாணமுற்றுத் தனது உடம்பைத் தன் நெடிய கூந்தலால் இழுத்து மறைத்தாள். இப் படியிருக்கையில் அரசிளங்குமரன் "நீ யார்? எங்கி ருந்து வந்தாய்?" என்று அவளை வினவினன். அவ ளோ தனது கரிய நிறமான பெரிய கண்களால் அவ னைத் துயரோடு பார்த்தாள். பேச இயலாததினுல் அவள் வேறென்ன செய்ய முடியும்?

அவன் அவளைக் கையிற் பிடித்துத் தனது மாளி கைக்குள்ளே கூட்டிச் சென்முன். சூனியக்காரி சொல் லிய வண்ணம் அவள் ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்கும்போது ஊசியின்மேல் அல்லது கூரிய கத்தி முனையின்மேல் கால் வைத்து நடக்கும்போது எழும் நோ போன்று பொறுக்க முடியாத நோ அவளுக்கு உண்டாயது. எனினும் அதனை வெளிக்காட்டாது பொறுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு நடந்து சென்முள். அரசிளங்குமரனுக்கு அருகில் நடந்து சென்று அம் மாளிகையின் படிகளையெல்லாம் காற்றுப்போல் ஒரு வித பொறுப்புமின்றித் தாண்டினள். அங்கு அவளைக் கண்டோர் யாவரும் அவளின் அன்னம் போன்ற நடையைப் பார்த்துத் திகைப்புற்றனர். சிலநாட்கள் சென்றதும் அவள், பட்டு, கவணி முதலிய ஆடைக ளால் இயற்றிய உடைகளை அழகாக அணியக் கற்றுக் கொண்டாள். அவ்வுடைகளை அணியத் தொடங்கிய தும் அம்மாளிகையிலுள்ள ஏனைய பெண்கள் யாவரி லும் மிக அழகுள்ளவளாய்த் திகழ்ந்தனள். ஆனல் அந்தோ, அவள் ஊமை. பேசவும் முடியாது, பாட

வும் முடியாது. கண்ணைக் கவரும் அழகு வாய்ந்த வனிதையர் பலர் பட்டுடுத்துப் பொன்பூண்டு அரசிளங் குமரனோடு கலந்து உரையாடிக் கொண்டிருக்கும் மந்திரி பிரதானி முதலிய பெரியோருக்கு முன்னே வந்து இனிய கீதங்களைப் பாடுதல் வழக்கம். இப்படியான வேளையொன்றில் அங்குள்ள இளம்பெண்டிருள் ஒருத்தி யாவரினும் மிக இனிமையாகப் பாடினள். அவள் பாடி முடிந்ததும் அரசிளங்குமரன் அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்து மகிழ்ச்சியோடு கைதட்டி மெச்சினன். அதைக் கண்டு சிறுமி தனக்கும் ஒரு காலத்தில் அவர் யாவரிலும் மிக இனிமையாய்ப் பாடும் வன்மை இருந்தது என்றும், ஆனால் இப்பொழுது அவ்வன்மை இல்லாமற் போனதே என்றும் தனக்குள்ளே நினைத்துத் துயரடைந்தாள். "இவருக்குப் பக்கத்தில் இருக்கவேண்டும் என்ற ஆசையால் அல்லவோ என்னுடைய அருமையான குரலை இழந்தேன்" என்று எண்ணித் துன்பமுற்றாள்.

பாட்டுக்கச்சேரி முடிந்தபின் நடனம் தொடங்கியது. வாத்தியம் ஒலிப்ப அங்குள்ள வனிதையர் சிலர் கண்ணைக் கவரும் நடனமொன்று ஆடினர். அதைக் கண்டதும், அச்சிறுமி கால்விரலில் எழுந்துநின்று கைகளைச் சுழற்றி மெல்ல மெல்ல நகர்ந்து அழகிய நடனமொன்று ஆடினள். இத்தகைய அழகிய நடனத்தை அங்குள்ளார் எவரும் ஒருபோதும் கண்டதில்லை. அபிநயம் ஒவ்வொன்றும் அவள் காலின் அழகைக் காட்டியது. கண்கள் அவளது உள்ளக்கிடக்கையை விரித்துரைத்தன. அந்நடனத்தைக் கண்ட யாவரும் வியப்

படைந்தனர். அரசிளங்குமரனே அவர் யாவரினும் மிக்க வியப்படைந்தான். அடிகளைப் பெயர்த்துப் பெயர்த்து ஆடும்போது உண்டாகிய நோ மிக வருத்திய போதிலும் நடனத்தை அவள் நிறுத்தவில்லை. அப்பொழுது அரசிளங்குமரன் அவளை அணுகித் தன்னை விட்டுப்பிரியாது எப்போதும் மாளிகையிலேயே இருந்து தன்னை மகிழ்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனன்.

குதிரைச்சவாரி செய்வதற்காக அவளுக்கு ஓர் உடை தைத்துக் கொடுத்தனன். அவன் சவாரி போகும் இடமெல்லாம் அவளும் ஒரு குதிரையின்மேலேறி அவனைப் பின்தொடருவது வழக்கம். இவ்வண்ணம் பூக்கள் நறுமணம வீசும் காடு யாவும் அவள் அவனுடன் போய்த் திரிவள். சிறு பறவைகள் பாடுவதைக் கேட்டு மகிழ்வள். சவாரி போகும்போது சில வேளைகளில் பச்சிலை படர்ந்த மரக்கிளைகள் அவள் தோள்களில் உரோஞ்சும். அல்லாமலும் அவனுடன் மலைகளில் ஏறும் வேளைகளில் அவளினது சிறிய அடிகளினின்று இரத்தம் கொப்பளித்து ஓடும். அதைக் கண்டோர் யாராவது அவளுக்குச் சொன்னல், அதனைப் பொருட்படுத்தாது மேலும் மேலும் அவனோடு கூடி ஏறியே திரிவள். இவ்வண்ணம் அவள் மலையுச்சிகளில் ஏறிநின்று கீழே பார்ப்பதுண்டு. அப்பொழுது மலையின் நடுப்பாகத்திற் படியும் முகில் யாவும் அவள் கண்ணுக்குச் சிட்டுக்குருவிக் கூட்டம் பறந்து திரிவதுபோலத் தோன்றும்.

இவ்வண்ணம் அவனோடு அங்குமிங்கும் திரிவதால் அவளுடைய சிறிய அடிகள் எரியத் தொடங்கிவிடும்.

அதற்காக இராவேளையில் மாளிகையில் யாவரும் துயின்றபின்னர் அவள் அங்குள்ள பெரிய வெண்கற் படிக்கட்டால் இறங்கி அதன் கடைசிப்படியில் இருந்து கொண்டு தன் கால்களை நீரில் வைத்துக் குளிரப் பண்ணுவாள். அந்நேரங்களிலே அவளுக்குத் தான் விட்டுப் பிரிந்து வந்த கடலினடியில் வாழ்பவரைப்பற்றிய எண்ணம் உண்டாகும்.

ஒருநாள் இரவு தன் சகோதரியர் ஒருவரோடொருவர் கைகோத்துப் பாடியவண்ணம் கடலில் நீந்திக் கொண்டிருப்பதைக் கண்டாள். உடனே அவள் தன்னருகில் வரும்படி அவரை அழைத்தாள். அவர் கிட்ட வந்து பார்த்தபோது அவள் தம்முடைய சகோதரியே என்று கண்டதும், அவள் காணுமற்போன நாள் தொடக்கம் அவளைக் காணுது தாம் பட்ட துயரை அவளுக்கு எடுத்துக்கூறினர். அன்றுமுதல் ஒவ்வோர் இரவும் அவளைக் காண்பதற்காக அவர் வந்து போவார். ஒருநாள் அச்சிறுமி வயது முதிர்ந்த தனது பாட்டியையும் கடலிலே தூரத்திற் கண்டாள். இவள் பல ஆண்டுகளாகக் கடலின் மேற்புறத்துக்கு வந்ததில்லை. அத்துடன் முடியணிந்த வண்ணமே கடலரசனும் வந்து தன்னை அங்கு வரும்படி கையசைப்பதையும் கண்டாள். அவள் சகோதரியர் வரும் தூரத்திற்குத் தாமும் வர அவருக்குத் துணிவு போதாது. அதனுலேயே கடலில் அவ்வளவு தூரத்தில் அவர் இருவரும் நின்றனர்.

இஃதிவ்வாருக, அரசிளங்குமரனுக்கு வரவர அவள் மேல் அன்பு அதிகரித்துக்கொண்டு வந்தது. எனினும்

அது ஓர் அழகிய குழந்தைமேல் வைக்கும் அன்பு போன்றதேயன்றி வேறொன்றுமன்று. அவளை மணம் முடித்து ஓர் அரசியாக்குதல் வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஒருசிறிதாவது வரவில்லை. அன்பு காதலாய் மாறினாலன்றோ அத்தகைய எண்ணம் வரும். ஆனால் அழியா உயிரை அவள் பெறவேண்டுமெனின் அவன் அவளை மணம் முடித்தல் வேண்டும். எப்போது வேறொருத்தியை மணம் முடிப்பானோ அப்போதே அவள் கடல்நுரையாய் மாறிவிடுவாள். இது திண்ணம்.

ஒருநாள் அவன் அவளை அன்பாய்த் தன்னருகில் அழைத்து அவள் உச்சியைத் தடவிக்கொண்டு ஏதோ ஆழ்ந்த எண்ணத்தோடு நிற்பவன் போலத் தோன்றினான். அப்போது அச்சிறுமியின் கண்கள், "யாவரினும் மேலாக நீ என்னை விரும்புகின்றாயா, இல்லையா?" என்று கேட்பதுபோல் அவனை நோக்கின. அவனும் அதை ஊகித்து அறிந்தவனாய்ப் பின்வருமாறு விடை பகர்ந்தனன். "ஆம், வேறு யாவரினும் மேலாக உன்னையே விரும்புகின்றேன். ஏனெனில் உன்னுள்ளம் களங்கமற்றது. நீ என்மீது மிகுந்த அன்பு பூண்டிருக்கின்றாய். அது எனக்குத் தெரியும். மற்றும், உனது சாயல் யான் முன்னொருநாட் கண்ட சிறுமி ஒருத்தியை எனக்கு நினைவூட்டும். அச்சிறுமியை யான் இனிக் கனவிலும் காணமுடியாது. அவளை யான் கண்ட வரலாற்றை உனக்குச் சொல்கிறேன் கேள். ஒருமுறை யான் பயணம் பண்ணியபோது யான் ஏறிச் சென்ற மரக்கலம் கடலில் உடைந்து விட்டது. அப்போது அலைகள் என்னை மோதி இழுத்துக்கொண்டு வந்து கரையில் ஒரு தவத்தியர்சாலைக்கருகில் ஒதுக்கின. அச்சாலையிலே

இளம்பெண்கள் பலர் இருந்தனர். அவரில் ஒருத்தி யான் கடற்கரையில் ஒதுக்குண்டு கிடப்பதைக் கண்டு என்னை எடுத்து என் உயிரைக் காப்பாற்றினாள். அவளை இருமுறைதான் யான் என் கண்ணுற் கண்டேன். எனினும் உலகத்திலுள்ள பெண்டிர் யாவரினும் அவள் மேலேயே எனக்குக் காதல், உனது சாயல் அவளை ஒத்திருக்கின்றது, உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறபடியாலேதான் கொஞ்சமாவது என் மனம் ஆறுதல் அடைகின்றது. அவளோ ஒரு தவத்தியர்சாலைக் குரியவள். ஆகையால் அவளை யான் கனவிலும் அடைய முடியாது என் நல்வினையின் பயனாகத்தான் நீ என்னிடம் வந்து சேர்ந்தனை. ஆகையால் நாம் ஒருகாலமும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியலாகாது."

அவன் கூறியதைக் கேட்டதும் அச்சிறுமி எண்ணியதாவது :- "அன்று தன்னை யானே காப்பாற்றியதென்றும், அலைகளுக்கூடாக எடுத்துச் சென்று காட்டுக் கருகே யிருக்கும் தவத்தியர்சாலைக்கு முன்னுள்ள கடற்கரையிற் கிடத்தியதென்றும் இவருக்குத் தெரிந்திலது போலும். கரையில் யான் கிடத்திவிட்டு இவரைக் காப்பாற்ற யாராவது வருவாரோவென்று மறைந்து பார்த்துக்கொண்டிருந்ததும் தெரிந்திலது போலும். என்னைப் பொருட்படுத்தாது இவர் தமது உள்ளத்திற் கருதும் சிறுமி யாரென்று எனக்குத் தெரியும்" அழ முடியாததால் அவள் பெருமூச்செறிந்தாள். பின்னரும் எண்ணுவாள்: "அச்சிறுமி ஒரு தவத்தியர்சாலைக்கு உரியவள் என்று இவர் கூறுகின்றனர். அப்படியென்றால் அவள் அங்கிருந்து ஒருக்கா

லும் வெளியே வர முடியாது. ஆதலின் இவரிருவரும் இனிமேல் ஒருவரையொருவர் காணுதல் அரிது. யானோ இவருக்கருகில் எப்போதும் இருக்கின்றேன். அதனால் நாள்தோறும் என்னையே காண்கிறார். அன்றியும் என்னுள்ளத்தினும் எப்போதும் குடிகொண்டிருக்கின்றார். யான் இவரையே காதலிக்கின்றேன். என் வாழ்க்கை இன்பம் முழுவதும் இவருக்கே அளித்துவிட்டேன் ''

இப்படியிருக்க அயலூர் அரசனொருவனின் மகளை அரசிளங்குமரன் மணம் முடிக்கப் போகின்றான் என்றும், அவ்வூருக்குப் போவதற்காக ஒரு மரக்கலம் அலங்கரித்து ஆயத்தஞ் செய்கின்றனர் என்றும் அவ்வூரில் ஒரு கதை பரவியது. அவ்வரசனது தேசத்துக்குப் போய் அவனோடு நட்புக் கொண்டாடுவதற்காகவே எம் அரசிளங்குமரன் அங்கு போகின்றான் என்று அரண்மனையிலுள்ளோர் பேசிக்கொண்டனர். ஆனால் உண்மையில் அவன் போவது அந்த அரச கன்னிகையைப் பார்ப்பதற்கேயாம், என்றும் ஒரு செய்தி உலாவியது.

இக்கதையைக் கேட்டதும் முதலில் அவ்வீரரமகள் தலையசைத்துச் சிரித்தனள். ஏனெனில் யாவரினும் பார்க்க அரசிளங்குமரனுடைய உள்ளக்கிடக்கை அவளுக்கே நன்கு தெரியும். இஃது இவ்வண்ணமிருக்க ஒருநாள் அரசிளங்குமரன் அவளை நோக்கிப் பின்வருமாறு உரைத்தான்: ' யான் விரைவில் அரச கன்னிகை ஒருத்தியைப் பார்ப்பதற்காக அயலிலுள்ள தேசமொன்றிற்குப் போகிறேன். இச்செய்தி இவ்வளவில் ஒருவேளை உன் காதில் எட்டியிருக்கும். எனது

தாய் தந்தையர் நெருக்குவதினாலேயே அங்கு போகின்றேன். எனக்கு அவளைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் சிறிதேனும் இல்லை. இப்படி யான் போய் வந்தாலும் அவளை என் மனைவியாக்கும்படி அவர் என்னைக் கட்டாயப் படுத்த முடியாது. ஏனெனில் தவத்தியர்சாலையில் யான் கண்ட சிறுமியின் சாயல் அவளுக்கு இருக்காது. உனக்குத்தான் அது உண்டு. இக்காரணத்தினால் அவளை யான் ஒரு காலமும் காதலிக்க மாட்டேன். உள்ளத்தைக் கண்ணிற் காட்டும் சிறுமியே! யான் மணம் முடிக்க விரும்பின் உன்னையே முடித்துக்கொள்ளுவேன்" இவ்வாறு கூறி அவள் நெற்றியைத் தடவி நெடிய கூந்தலைக் கையாற் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது அச்சிறுமியோ தனக்கு வரப்போகும் இன்பத்தைப்பற்றியும் அழிவில்லா உயிரைப்பற்றியும் எண்ணியெண்ணி உள்ளம் மகிழ்ந்தாள்.

இறுதியில் அயல்நாட்டரசன் பட்டினத்துக்கு அரசிளங்குமரன் போவதற்காக மரக்கலம் ஆயத்தமாக நின்றது. அவன் போகப் புறப்படும்போது அந்நீரர மகளையும் தன்னுடனே ஏகும்வண்ணம் கேட்டுக்கொண்டான். அதனால் அவளும் அவனோடு கூடச் சென்றாள். யாவரும் மரக்கலத்தில் ஏறிய பின்னர் அரசிளங்குமரன் அச்சிறுமியைப் பார்த்துப் பின்வருமாறு வினவினன். "திக்கற்ற சிறுமியே! ஊமையாய்ப் பிறந்துவிட்டாயே. பாவம், கடல்மேற்போவதை நினைத்து நீ பயப்படவில்லையா?" அதற்குச் சிறுமி வாளா விருந்தனள். பின்னர் அவன் கடலில் அடிக்கும் புயற்காற்றையும், அது அமர்ந்தபின் கடல் குளம்

போல் இருக்கும் அமைதியின் அழகையும், மற்றும் அங்கே வாழும் பலவகை மீன்களையும், கடலிற் சுழி யோடுவோர் அதன் அடியிற் காணும் பொருட்களை யும், அவளுக்கு விரிவாய் எடுத்துரைத்தான். இவற் றைக் கேட்டு அவள் புன்னகை புரிந்தாள். கடலின் அடியிலுள்ள இரகசியங்களைப்பற்றி அவளுக்குத் தெரிந்ததுபோல் வேறு யாருக்குத்தான் தெரியும்?

இவ்வாறு மரக்கலம் பாயெடுத்து அயல்நாட்டரசன் நாட்டை நோக்கிப் போகும்பொழுது ஒருநாள் இரவு சுக்கான் பிடிப்பவனைத் தவிர மற்றெல்லோரும் நித் திரை போயினர். அப்பொழுது நிலா பட்டப் பகல் போல் எறித்தது. நீரரமகளோ நித்திரை கொள்ளாது மரக்கலத்தினது அருகொன்றிற்போய் அமர்ந்து கடல் நீரைப் பார்த்தவண்ணமாய் நின்றாள். அதற்கூடா கக் கடலுக்குள் இருக்கும் தனது தந்தையின் மாளி கையை நோக்கினாள். அப்போது அவள் தந்தையும் பாட்டியும் தலையிலே வெள்ளிமுடி அணிந்தவராய் மரக்கலத்தை அங்கிருந்த வண்ணமே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அவள் சகோதரியர் கடலின் மேற் புறத்து வந்து அவளைத் தம்மிடம் வரும்படி கையை அசைத்தனர். இவ்வாறு செய்யவும் அவள் அவரிடம் போகாததினால், அவள் இனி ஒருபோதும் தம்மிடம் வரமாட்டாள் என்று வருந்திக்கொண்டு நின்றனர். அச்சிறுமியோவெனின் சைகைகாட்டிப் புன் னகை புரிந்து தான் சுகத்தோடு இருப்பதாக அவருக்கு அறியச் செய்தாள். இப்படியிருக்கும் காலையில் மரக் கலத்தின் இராக்காவலாளன் ஒருவன் வெளியே அதன் மேற்புறத்திற்கு வந்தான். அவனைக் கண்டதும் அவள்

சகோதரியர் நீருக்குள்ளே தாழ்ந்து விட்டனர். அவன் பார்வைக்கு அவர் வெண்மையான பொருட்கள்போலத் தோன்றினர். அலைமோதுவதால் உண்டாகும் வெண் நுரைகளென்று நினைத்தான்.

சிலநாட்களில் அயல்நாட்டு அரசனின் பட்டினத்தை மரக்கலம் அடைந்தது. அப்போது அங்குள்ள மணி யாவும் ஒலித்தன. மாடிகளிலிருந்து பலர் இன்னிசை அமைத்துக் குழல் ஊதினர். போர்வீரர் அணிவகுத்து நின்றனர். எங்கும் கொடி அசைந்து பறந்துகொண் டிருந்தன. அன்று தொடக்கம் அந்நாட்டில் விழாக் கொண்டாட்டமாகவே இருந்தது. கூத்தும் பலவித நடனமும் எங்கும் நடந்தன. ஆயினும் அரச கன்னி கையை அங்கு யாரும் கண்டதில்லை. அவள் ஒரு தூர தேசத்திலே ஒரு தவத்தியர்சாலைக்குள் வளர்ந்து வரு கின்றாள் என்றும், அரசகன்னியருக்குரிய ஒழுக்க வழக்க மெல்லாம் நல்லாய் அறிந்திருக்கிறாளென்றும் அங்குள் ளவர் சொல்லிக்கொள்வரேயொழிய எவராவது அவளை நேரே கண்ணால் கண்டதாகச் சொல்லவில்லை. ஏனெனில் இதுநாள்வரையும் அவள் பிறவூரிலேயே இருந்து வந்தாள். இப்போது அவள் தந்தை அவளை ஊருக்கு வருமாறு அழைத்திருந்தனன். அவ்வழைப்புக் கிணங்கி அவள் ஒருநாள் வந்து சேர்ந்தாள். அவ்வாறு வந்து சேர்ந்ததும் அவளைப் பார்க்கும்வண்ணம் அந்நாட்டி லுள்ளோர் யாவரும் வந்து கூட்டங்கூட்டமாய்க் கூடினர். நீரரமகளும் ஏனையோரைப் போலவே அவள் அழகைப் பார்ப்பதற்கு ஆவலுற்று அங்கு வந்து சேர்ந்தாள். அவ்வரசகன்னிகையைக் கண்டதும் அவளைப்போல் அழ குள்ள பெண்ணைத் தான் ஒருபோதும் கண்டதில்லை

என நினைத்தாள். அவள் உடல் மிக மென்மையாய் விளங்கியது. அவளின் மிருதுவான நெடிய இமைகளுக்கு இடையில் அவள் உள்ளத்தின் அழகைக் காட்டும் இரு கண்கள் திகழ்ந்தன.

அவ்விடத்து அரசிளங்குமரனும் வந்து சேர்ந்தனன். அவ்வரசகன்னிகையைக் கண்டதும் அவன் விரைந்து போய் அவளைத் தனது கையால் அணைத்துக் கொண்டு "நீ தானா அவள்? உண்மையைக் கூறு. அன்று கடற்கரையோரத்தில் பிணம்போற் கிடந்த என்னைக் காப்பாற்றியவள் நீதானா?" என்று பரபரப்போடு வினவினான். பின்பு நீரரமகளின் பக்கம் திரும்பி "இன்று எனக்கிருக்கும் உவகைக்கு அளவே இல்லை. யான் ஒருகாலமும் காத்திராத பொருள் இன்று என்னை வந்தடைந்தது. உன்னைப்போல் என்மேல் அன்புள்ளவர் இவ்வுலகத்து யாருமில்லை. ஆகையால் சிறுமியே! எனக்கு இன்றிருக்கும் மகிழ்ச்சியில் நீயும் பங்குபற்றல் வேண்டும். அது உனக்கும் உரித்தே" என்று சொன்னான். இவ்வண்ணம் கூறியதும் அச்சிறுமி அவன் கைமேலே தன் கையை வைத்துத் தன் உவகையைக் காட்டுவதற்காக மெல்லெனத் தட்டினள். ஆனால் அவர் இருவரும் மணமுடித்த மறுதினமே தான் இறந்து கடல் நுரையாக மாறவேண்டுமென்ற சாபம் சிறிது நேரத்தில் அவள் நினைவுக்கு வந்தது. உடனே அவள் நெஞ்சு பிளந்துவிடுவது போலப் படபடவென்று இடித்தது.

அதன்பின்னர், ஒரு நல்ல நாளிலே அரசிளங்குமரனுக்கும் அவ்வரசன் மகளுக்கும் மணம் முடிக்க

ஒழுங்கு செய்தனர். கோயில் மணிகள் ஒருங்கு சேர்ந்து ஒலித்தன. வீதிதோறும் மணமுரசு இயம்பின. மணவறை எங்கும் வெள்ளி விளக்குகள் எரிந்தன. அவ்விளக்குகளுக்கு விட்ட வாசனைத் தைலங்கள் யாங்கணும் நறுமணம் வீசின. மணமகனும் மணமகளும் கலியாணத்தின் பின் கைகோத்த வண்ணமாய் நிற்க மாமுது பார்ப்பான் ஒருவன் வாழ்த்துரை கூறினன். வீரரமகள் பொன்னிறப் பட்டணிந்து மணமகளுக்குத் தோழியாய் நின்றனள். ஆனால் மேளவாத்தியத்தின் இன்னிசை அவள் காதுகளில் விழவுமில்லை, அம் மணச்சடங்கை அவள் கண்கள் காணவுமில்லை. தான் உயிருடன் கழிக்கும் கடைசி இரா அதுவே என்றும், தனது உலகவாழ்வு இப்படிப் பாழாய்ப் போனதேயென்றும் எண்ணியவண்ணமாகவே இருந்தாள்.

அன்று பின்னேரமே மணமகன் தனது தேசத்திற்குத் திரும்புவதற்கு மணமகளுடன் மரக்கலம் ஏறினான். அப்போது பீரங்கிகள் ஒலித்தன. கொடிகள் காற்றில் எங்கும் அசைந்தன. மரக்கலத்து மேற்றட்டின் நடுவே ஊதா நிறமும் பொன்னிறமுமுள்ள படங்குகளால் ஒரு கூடாரம் அடித்திருந்தனர். மணமகளும் மணமகனும் ஆங்கு இரவில் நித்திரை புரிவதற்கு அழகிய மெத்தை விரித்த படுக்கை ஒன்று அமைத்தனர்.

மரக்கலம் பாய்விரித்து ஒருவித ஆட்டமுமின்றி விரைவாக ஓடத்தொடங்கியது. பொழுது பட்டதும் பலநிறமுள்ள விநோதமான விளக்குகளை ஏற்

றினர். அதன்பின் அங்குள்ளவர் உவகையோடு கப்பல் மேற்றட்டில் நடனமொன்று ஆடத் தொடங்கினர். வீரரமகளோவெனின் தான் முதன்முதல் கடலின் மேற் புறத்துக்கு வந்த அன்று நடந்த நிகழ்ச்சிகளை எண் ணத் தொடங்கினள். அன்றும் அவள் கண்களுக்கு இதுபோன்ற காட்சிகளே தோன்றின. இவ்வாறு எண்ணிக்கொண்டிருந்துவிட்டுத் தானும் போய் அந் நடனத்திற் பங்குபற்றினள். களைத்திடும்போது சிட் டுக்குருவி எவ்விதம் அங்குமிங்கும் ஓடித்திரியுமோ, அவ்விதமே அவளும் அங்குமிங்கும் சுழன்றுசுழன்று ஆடத் தொடங்கினுள். அதைப் பார்த்தவர் எல்லோ ரும் ஆனந்த மிகுதியாற் கைகொட்டி ஆரவாரித்தனர். அதுபோல அழகான நடனத்தை அவர் ஒருகாலமும் கண்டதில்லை, ஆடும்போது கத்தியால் வெட்டிக் கிழிந் பதுபோல் அவள் அடிகள் நொந்துகொண்டிருந்தன. ஆனுல் உள்ளத்திருந்த வருத்த மிகுதியால் அவள் எதையும் உணரவில்லை. தனது குடும்பத்தாரையும் மாளிகையையும் விடுத்து, அத்துடன் தனது நாக்கை யும் இழந்து நாள்தோறும் துயரில் ஆழ்ந்து இருப்பது யாருக்காக? அவ்வரசிளங்குமரனுக்காகவே. அவனை இன்றுதான் கடைசி முறையாய்த் தான் பார்ப்பது என்று எண்ணினுள். தான் அவனை அடையும் பொருட்டுப் பட்ட துன்பம் அளவிடற்கரிதாய் இருந்தும் அவன் அதை உணரவில்லை என்று அவள் அறிந்தாள். மேலே வெள்ளி பூத்து விளங்கும் வானத்தையும், கீழே அலசிக்கொண்டிருக்கும் கடலையும் மாறி மாறிப் பார்த்த வண்ணமாய் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள்.

தனது வாழ்வாகிய பகலுக்கு இருள் மூடிய முடிவிலா இரா வொன்று விரைவில் வரப்போகின்றது என்றும் அது வந்துவிட்டாலோ தன் உள்ளத்தில் எவ்வகையான எண்ணமும் எண்ண முடியாதென்றும் தெரிந்து கொண்டாள்.

இஃது இவ்வண்ண மிருக்க, மரக்கலத்திலோ ஓரே களியாட்டாகவே இருந்தது. நடுச்சாமம் கழிந்தும் நீரரமகள் நடனமும் சிரிப்புமாகவே இருந்தாள். ஆனால் அவள் உள்ளத்திலோ காலன் குடிகொண்டு விட்டான். இவ்வகையாய் நடக்கும் களியாட்டத்தின் நடுவில் அரசிளங்குமரன் தன் மனைவியைக் கையாரத் தழுவினான். அவளும் அவன் கூந்தலைத் தடவினள். பின்னர் ஒருவரை ஒருவர் கையாற் பற்றிக் கொண்டு அங்கு தமக்கென அமைத்த கூடாரத்துக்குத் துயில்புரியச் சென்றனர்.

உடனே மரக்கலத்தில் ஒலியெல்லாம் அடங்கிற்று. சுக்கானிமட்டும் சுக்கானில் இருந்தான். அச்சிறுமி தனது கைகளை மரக்கலத்தின் அருகே இருக்கும் கம்பியில் வைத்துக்கொண்டு கீழ்த்திசையை நோக்கியவண்ணம் நின்றனள். அப்போது கிழக்கு வெளிக்கத் தொடங்கி வானம் சிறிது சிறிதாகச் செந்நிறம் அடைந்தது. "சூரியனின் முதற் கதிர்கள் எப்போது வருமோ, அப்போதே யானும் இறந்து விடுவேன்" என்று அவள் எண்ணினள் இப்படியிருக்கக் கடலில் ஒரு பெரிய அலை புரண்டு அடித்தது. அப்பொழுது அவள் சகோதரியர் மேலே வந்தனர். அவர் நீண்ட கூந்தல் வெட்டியிருந்தது.

இவ்வாறு அவர் கடலின் மேற்புறத்து வந்து அவளை விளித்துப் பின்வருமாறு கூறினர்: "தங்காய்! பயப்படாதே. இன்றிரவு நீ இறக்க வேண்டியதில்லை. சூனியக்காரி எமது கூந்தலை வெட்டி எடுத்துக்கொண்டு, அதற்குப் பதிலாக உனக்கு ஓர் உதவி செய்திருக்கின்ருள். எம்மிடம் ஒரு கத்தியைத் தந்திருக்கின்ருள். இதோ பார், அதன் கூர்மையை. சூரியன் எழுவதன் முன்னர் அரசிளங்குமரனது நெஞ்சில் இதனுல் நீ குத்தி விடுதல்வேண்டும். அதனுல் உண்டாகும் காயத்தினின்று சீறிப்பாயும் அவன் இரத்தம் சூட்டோடு உனது இரு காலிலும் விழுதல்வேண்டும். உடனே அவை இரண்டும் தாமே ஒன்றுசேர்ந்து பழையபடி மீன்வால் ஆகிவிடும். நீ திரும்பவும் நீரரமகள் ஆகிவிடுவை. பின்னர் கடலுக்குக் கீழே இறங்கி முந்நூறு ஆண்டு எம்மோடு இருந்து உயிர் வாழலாம். அதன் முடிவிலேயே இறந்து கடல்நுரையாய் மாறுவை. ஆனுல் ஒன்று, சூரியனது முதற்கதிர்கள் தோன்றுமுன் அரசிளங்குமரன் இறத்தல் வேண்டும். பாட்டி பெரிய துயரில் ஆழ்ந்திருக்கின்ருள். அதனுல் வெள்ளையாய் நரைத்துப்போன அவள் கூந்தல் யாவும் வீழ்ந்து விட்டன. அதுபோல எமது கூந்தலும் சூனியக்காரியின் கத்தரிக்கோலுக்கு இரையாகி விட்டது. ஆகையால் தாமதிக்காதே. அரசிளங்குமரனைக் கொன்றுவிட்டு எம்மோடு வா. அதோ பார், வானத்திற் சிவப்புநிறம் மெல்ல மெல்லத் தோன்றுகிறது. இன்னும் சில நேரங் கழிந்தாற் சூரியன் எழுந்துவிடும். அப்பொழுது நீ இறந்து போவாய்." இவ்வாறு அவள் சகோதரியர் கூறிவிட்டுப் பெருமூச்சு எறிந்துகொண்டு அலைக்குள் மறைந்தனர்.

நீரரமகள் கூடாரத்துக்கருகிற் சென்று அதன் திரையை நீக்கிப் பார்த்தாள். அரசகுமாரி அரசகுமாரன் மார்பிலே தனது தலையை வைத்துத் துயின்று கொண்டிருப்பதைக் கண்டனள். திரையை நீக்கிக் கொண்டு கூடாரத்துக்குட் சென்று குனிந்து அரசிளங்குமரனது நெற்றியில் ஒரு முத்தம் இட்டனள். பின்னர் வானத்தைப் பார்த்தனள். அங்கு வெண்ணிறம் படர்ந்துகொண்டு வந்தது. தன் கையிலிருந்த கத்தியையும் அரசிளங்குமரனையும் மாறிமாறி நோக்கினள். அப்போது அரசிளங்குமரன் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தனது மனைவியைப்பற்றிக் கனவு கண்டு அவள் பெயரைக்கூறி வாய் புலம்பிக்கொண்டிருந்தனள். நீரரமகளின் கை நடுங்கியது. உடனே வானத்தின் நிழல்பட்டுச் செந்நிறம் அடைந்துகொண்டிருக்கும் கடலுக்குள்ளே தன் கையிலிருந்த கத்தியைச் சுழற்றி எறிந்தனள். பின்னர், பார்வை மழுங்கிக் கொண்டு வரும் தன் கண்களாற் கடைசிமுறை அரசிளங்குமரனைப் பார்த்தாள். அதன்பின் மரக்கலத்திலிருந்து கடலுக்குள்ளே குதித்தாள். அங்கு தனது உடல் கடல் நுரையாக உருகும் உணர்ச்சி அவளுக்கு உண்டாயது.

முற்றும்.

அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சியந்திரசாலை,
தெல்லிப்பழை.

## இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள்:-

1. காதலி ஆற்றுப்படை
2. நாடகம்
3. மாணிக்க மாலை
4. இரு நாடகம்
5. சங்கிலி (அச்சில்)
6. வாழ்க்கையின் விநோதங்கள் (அச்சில்)
7. பூஞ்சோலை

---

விற்பனையாளர்கள் :

இரத்தின புத்தகசாலை,
பிரதான புத்தக வியாபாரிகள்,
130, மலாய் வீதி,
கொழும்பு.

அமெரிக்கன் மிஷன் அச்சியந்திரசாலை, தெல்லிப்பழை.